Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்

எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டுமிடமும்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 2222486

(சி-464) கிளை:- கொக்குவில், சுன்னாகம்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 07 (11.01.2003) சனிக்கிழமை இதழ் : 102

## உயர் பாதுகாப்பு வலய விவகாரம்

# பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாயின் பிரதமர் ரணிலை பதவி நீக்குவேன்!

### விண்ணாணம் விநாசியர்



பாத்துக் கொண்டிரு, 100வது தரம் குத்துக்கரணம் அடிச்ச றெக் கோர்ட்டை வலுகெதியா அம்மையார் வச்சிருவா...

## ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகளின்போது நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடந்து கொண்டால், அவரைப் பதவியில் இருந்து அகற்ற நான் தயங்கமாட்டேன் என எச்சரித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

ரணில் அரசின் சில அண்மைக் கால முடிவுகள் தேசிய பாதுகாப்பை மிக மோசமாகப் பாதித்துள்ளன. இது தொடர்பாக ஏற்கனவே பாதுகாப்பு உயரதிகாரிகள் என்னிடம் முறையிட்டுள்ளனர். இது தொடர்பாக உன்னிப்பாக அவதானிக்குமாறு நான் அவர்களைப் பணித்துள்ளேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த திங்களன்று எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை அழைத்துப் பேசிய ஜனாதிபதி, நாட்டின் பாதுகாப்புக் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நாடாளுமன்ற ரீதியிலான பிரசாரத்தை முடுக்கிவிடும்படி பணித்துள்ளார் எனவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

## விடுதலை உணர்வுக்கு உரமூட்டும் பாடல்கள் வரவேற்பு பெறுகின்றன

(யாழ்ப்பாணம்)



குப்புசாமி தன் மனைவி அனித்தாவுடன்

எனது கிராமியப் பாடல்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, ஈழத்திலும் கூட இன உணர்வை தட்டியெழுப்பக் கூடியவை. எனது பாடல்கள் உலகிலுள்ள பெருந்தொகையான மக்களுக்குப் பயன்பட வேண்டும். இதுவே எனது இலட்சியம், இவ்வாறு நேற்று யாழ்.நகரில் நடைபெற்ற 'கிராமியக் காற்று' இசைநிகழ்ச்சியில் பங்குபற்ற முன்னர் எமது செய்தியாளருடன் உரையாடும் போது தமிழகத்தின் பிரபல கிராமிய இசைப் பாடகரான புஷ்பவனம் குப்புசாமி தெரிவித்தார்.

எனது இசை நிகழ்ச்சிகள் தமிழகத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை புலிகள் முதலில் கைவிடவேண்டும்

### அதன் பின்பே படைவிலகல் என்கிறார் அமுனுகம



(கொழும்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவேண்டுமானால் புலிகள் இயக்கம் தம்மிடமுள்ள கனரக ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும். இவை இரண்டும் ஏக காலத்தில் நடைபெற வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களை மனிதாபிமான அடிப்படையில் மீளக்குடியமர்த்துவது எவ்வளவு முக்கியமானதோ, அதேபோன்று பாதுகாப்பும் முக்கியம் . இது தொடர்பாக அரசாங்கம் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணி பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம, நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகததில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்துத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் வடக்கு மக்களின் மறியல் போர் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், வலி. வடக்கு பிரதேச செயலர் காரியாலயத்திற்கு முன்பாக கடந்த ஆறு நாட்களாக நடைபெற்று வந்த மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டம், நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டது.

தற்பொழுது தாய்லாந்திலே நடைபெற்ற நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் மீளக்குடியமர்வு, பாதுகாப்பு வலயம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளமையால், தமது போராட்டம் இடைநிறுத்தப்படுவதாக ஒன்றியத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

போராட்ட முடிவில், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கத்திடம், ஒன்றியச் செயலாளர் இ.சாம்பசிவம் பிரதமருக்கு வழங்கும்படி மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றும் போது, எதிர்வரும் செவ்வாய்க்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சதொச சந்தை திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சதொச நவீன வர்த்தக சந்தை, நேற்று வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது. முன்னர் வின்சர் படமாளிகை இருந்த கட்டடமே நவீன சந்தைக் கட்டடமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் நடைபெற்ற இத்திறப்பு விழா வைபவத்தில், அமைச்சருடன் ஐ.தே.க. பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கொழும்பு விலையில் இங்கும் பொருட்களை மக்கள் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டதாக அமைச்சர் கருணாநாயக்க வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க யாழ்.பொதுநூலகத்திற்கும் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் நேற்றுச் சென்றார். (லி)

### உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம்

## மேஜர் ஜெனரல் நம்பியார் அறிக்கை இரு வாரங்களில் சமர்ப்பிக்கப்படும்

யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்கள் மீள் குடியேற்றம் தொடர்பாக தனது அறிக்கையை, இந்தியாவின் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியார் அடுத்த இரு வாரங்களுக்குள் வெளியிடவுள்ளார்.

பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் தொடர்பாக ஆராய, இலங்கை அரசு இவரின் நிபுணத்துவ ஆலோசனையைக் கோரி, விபரங்களைச் சமர்ப்பித்தது. யாழ் மாவட்ட உயர் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்த மேஜர் ஜெனரல் நம்பியார், தனது ஆய்வை முடித்துக்கொண்டு விட்டதாகவும் அடுத்த இரு வாரங்களுள் தனது ஆலோசனைகள் அடங்கிய திட்டததை கொழும்புக்கு அனுப்பிவைப்பார் எனவும் தெரியவருகின்றது.

## இந்திய பாதுகாப்பு ஆலோசகரை புதுடெல்கியில் மிலிந்த சந்திப்பு!

நான்காம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டுவிட்டு இந்தியா விரைந்த, பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட, அங்கு இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரிஜேஸ் மிஸ்ராவை சந்தித்து பேச்சுகள் பற்றிய விபரங்களைத் தெரிவித்தார்.

அமைச்சர் மொறகொட, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவுடனும் இலங்கை அரசு -விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சு விபரங்கள் தொடர்பாக பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

## பாலா – அகாஷி சந்தித்தனர்

(பாங்கொக்)

இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷி, தாயலாந்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நான்காம் கட்ட சமாதானப் பேச்சுக்களை முடித்துக்கொண்ட விடுதலைப் புலிகள் தரப்பினரை, நகொன் பத்தமிலுள்ள விடுதியில் வைத்து அகாஷி சந்தித்தார்.

எதிர்வரும் ஜூன மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள நிதியுதவி மாநாடு தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் குறித்தே இப்பேச்சுக்கள் அமைந்திருந்தன.

யசுகி அகாஷி விரைவில் இலங்கை வந்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் ஜப்பானியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## தேவை

பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள் தேவை
தொடர்பு:
**National Security Project**
தேசிய பாதுகாப்புத் திட்டம்,
இல.181/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(099)

## உங்கள் வியாபாரம் பெருக நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்யுங்கள்

## நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சூர்யா, லைலா, சினேகா நடித்த
**உன்னை நினைத்து**
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 மட்டும் **SPIDER MAN**
(சி/397)

## ராஜா யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா சௌத்திரி,
வடிவேல், மணிவண்ணன் நடித்த
**சுந்தரா டிராவல்ஸ்**
10.30, 2.30, 6.00
(சி-398)

Imran Bakrudeen
Director

**ASIAN MARKETING (PVT) LTD.**
IMPORTERS, DISTRIBUTORS AND HARDWARE- MERCHANTS




12, Hultsdorf Street, Colombo -12
Tel : 448226,074-712557
Fax: 0094-1-337573
Email : asianmkt@hotmail.com
Branch : 129 Dam Street
Tel : 473358
(சி-465)

## NIPPON PLASTIC INDUSTRIES
## நிப்பொன் பிளாஸ்ரிக் தொழிலகம்

Bathalagoda, Ibbagamuwa,
Kurunegala, Sri Lanka.
Tel:037-59823, 59691
074-698484, 698497
Fax:037-59823
E.mail: nippon@mail.ewisl.net

HEAD OFFICE:
186,Main street , Colombo -11
Tel:01-437020, 336695
Fax:01-336695
Hot line: 077 - 389392
(சி-462)

## காமராஜர் பல்கலைக்கழகம்
### (மதுரை)

M.A.பட்டப் பாடநெறிக்கான விரிவுரைகள் 05.01.2003ல்
ஆரம்பமாகிவிட்டன.
M.Com விரிவுரைகள்
**ஆரம்பம்: 12.01.2003, 2 மணி**
இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு: யாழ்.இணைப்பாளர்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி - யாழ்.
(சி-463)

## ஏழாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY



BIRTHDAY

## செல்வி நிலானி சாகீஸ்வரன்

திரு.திருமதி சாகீஸ்வரன் - தயாபரி தம்பதிகளின்
**செல்வப் புதல்வி நிலானி (ஜொய்ஸி)**
தனது ஏழாவது பிறந்த தினத்தை 11.01.2003 (இன்று) கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, பிரான்ஸில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, அன்ரி, சித்தப்பா, அண்ணாமார், அக்கா, தங்கச்சிமார், மாமாமார் மற்றும் பருத்தித்துறையில் வசிக்கும் அன்பு அன்ரா, சித்தா, தம்பி, ஷாயுக்குட்டி மற்றும் மாமா, அத்தை, மச்சாள்மார், மச்சான் யாவரும் இவரை பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

S.விஜயன் (சித்தா)
(096)

## இன்றைய நாள் இனிய நாள்

### 11-01-2003 - சனிக்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- மனப்பயம், பொருளாதார முன்னேற்றம், சந்தோஷம் |
| இடபம் | :- பிரயாசம், புத்திக்குறைவு, பொருள்செலவு, சிறைப்பயம் |
| மிதுனம் | :- நிலைப்பிரிவு,திரவிய லாபம், குடும்ப சுகம், சந்தோஷம் |
| கர்க்கடகம் | :- தேகசுகக்குறைவு, பொருள்வரவு, வீண்செலவு, மனப்பயம் |
| சிங்கம் | :- பொருட்சேதம், மனக்கவலை, தகுதிக்கு மீறிய ஆசை |
| கன்னி | :- வெளியூர் பிரயாணம், அதிகசெலவு, மனப்பயம், பொருள்வரவு |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- குடும்பசுகம், மனவேதனை, காரிய வெற்றி, திரவியலாபம் |
| விருச்சிகம் | :- காரியசித்தி, மனச்சந்தோஷம், லட்சுமி கடாட்சம், பொருள் விருத்தி |
| தனு | :- இரத்தகாயம், காரிய விக்கினம், பகை, ரோக பயம் |
| மகரம் | :- களஸ்திரசுகம், பொருள்வரவு, குடும்ப சந்தோஷம் |
| கும்பம் | :- மகிழ்ச்சி, திரவியலாபம், மனக்கசப்பு, துன்பம் |
| மீனம் | :- நல்லவாழ்வு, பொருள்வரவு, புத்திரரால் நன்மை, சுகம் |

## சிறு விளம்பரம்

### பல் கட்டுதல்

பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் நல்ல முறையில் நியாயமான விலையில் மேற்கொள்ளவும், கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறவும் முடியும். (மொறாயஸ்), ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம்.
(சி-456)

### கல்வி

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு குறைந்த காலத்தில் விசேட சித்திக்கு கற்பிப்பதில் 38 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆண்டு 6 - 11 வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், இல.10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி.
(091)

ஹெல்மெட், லைசென்ஸ், தேவையற்ற நல்ல நிலையிலுள்ள நியூமொடல் மோட்டார் சைக்கிள் HERO - GIZMO ஒன்றும், புதிய Aiwa ஓடியோ வீடியோ Mp3 அடங்கிய செற் (1400 w) ஒன்றும் விற்பனைக்குண்டு. C/o இரட்ண சபாபதி, வைரவர் கோவிலடி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.
(094)

## 2003 தைப்பொங்கல் வர்த்தக கண்காட்சியில்

FUJICOOL

### உங்கள் மனங்கவர் தெரிவுகளுக்காக




**யாழ்ப்பாணத்திற்கான விற்பனை முகவர் தேவை**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

**FUJI AIRCONDITIONING (PVT) LTD.**
35- 2/10, 2ND Floor, Plaza Complex,
Galle Road, Colombo 06, Sri Lanka.
Tel: 074 - 516106-7 Hotline: 556315 FAX: 075 515174
E.Mail: fujiaire@dynaweb.lk
(சி-467)



## கடந்த பல வருடங்களாக யாழ்.நகரில்

உயர்ந்த தரம், நீடித்த பாவனை கால நிலைக்கேற்ப
Cotton & Nylon Socks , சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள்
அலுவலர்களுக்கேற்ற புதிய டிசைன்களில் இன்னோரன்ன தயாரிப்பு
மொத்த வியாபாரிகளுக்கும், பாடசாலை
மாணவர்களுக்கும்
விசேட கழிவு வழங்கப்படும்.

**SILVER SHIELD SOCKS**
**SRI MURUGAN**
303, K.K.S. ROAD, JAFFNA
T.P. 021 222 2670 FAX: 021 222 3214
(சி - 466)

# வட - கிழக்கு பாடசாலைகளில் 3 ஆயிரம் ஆசிரியர் நியமனம்

## கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவிப்பு

(கொழும்பு)

வட- கிழக்குப் பகுதிகளிலுள்ள



திருமலையில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் மாணவர்களுக்குப் புத்தகப்பைகளை அன்பளிப்புச் செய்கிறார் அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு. (படம்: கௌதமன்)

பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் மூவாயிரம் தமிழ்மொழிமூல ஆசிரியர்களை விரைவில் நியமிக்கவுள்ளதாக மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார விவகார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நேற்றுமுன்தினம், தரம் 1 இல் புதிய மாணவர்களை இணைக்கும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

இன்று நாடு முழுவதும் 30 ஆயிரம் புதிய மாணவர்கள் தரம் 1 இல் அனுமதி பெறுகிறார்கள். இவ்வாறு பாடசாலைகளுக்குச் சேரும் மாணவர்களில் கல்வியைப் பூர்த்தி செய்யாமல் 4 சதவீதமான மாணவர்கள் இடையில் விலகிவிடுகின்றனர்.

இடை விலகும் மாணவர்களின் தொகை வட - கிழக்குப் பகுதிகளில் 16 சதவீதம் இருக்கின்றது. யுத்த சூழல் காரணமாக, வட - கிழக்கு மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

வட - கிழக்கு மாகாணத்திலுள்ள பெருமளவிலான பாடசாலைகள் யுத்த நடவடிக்கைகளின்போது சேதமடைந்திருக்கின்றன. இவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சமுதாய மீளமைப்பு நிறுவனம், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் உதவி பெறப்படவுள்ளது.

உலக வங்கி, வட - கிழக்குப் பகுதிப் பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார். (04)

## தீக்காயமடைந்த பெண் மரணம்

(கொழும்புத்துறை)

குப்பிவிளக்கை ஏற்றி வைத்துவிட்டு உறங்கியவேளை, குப்பி விளக்குத் தட்டுப்பட்டு, எரிகாயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு பிள்ளைகளின் தாயார் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் என்னுமிடத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் தவமலர் (வயது 39) என்ற பெண்மணியே உயிரிழந்தவராவார். (60)

## இனவாத மகுடியில் மயங்கும்...!




# வானொலி நிலையம் அமைக்க அனுமதி தருமாறு சிஹல உறுமய கோரிக்கை

## மறுத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்படுமாம்

(கொழும்பு)

சிங்கள மக்கள் தங்கள் தலைவிதியைத் தாமே உணரத்தக்க வகையில், தமது கட்சியின் வானொலி நிலையம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் எனச் சிஹல உறுமய கோரியுள்ளது.

தற்பொழுது தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கானதல்ல.

மாறாக, இது தமிழீழத்தினை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைதான் எனச் சிஹல உறுமயவின் செயலாளர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்விடயத்தினை மகாசங்கத்தினர் எதிர்க்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எமது கட்சி வானொலி நிலையம் அமைக்க அரசு அனுமதிக்காதுவிடின், தாம் அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்குத் தொடரப் போவதாகவும் சிஹல உறு மய தெரிவித்துள்ளது.

அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மக்களைத் திரட்டி, தமக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்வோம் எனவும் சிஹல உறுமயவின் செயலாளர் திலக் கருணாரட்ண தெரிவித்தார். (01)

### நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழுவின்

# உத்தரவுக்கு கீழ்ப்படிய முடியாது ஷெல் காஸ் நிறுவனம் அறிவிப்பு

ஷெல் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலையை 45 ரூபாவால் குறைக்கும்படி நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழு உத்தரவிட்டிருக்கிறது.

அண்மையில் ஷெல் காஸ் நிறுவனம், காஸ் சிலிண்டரின் விலையைத் திடீர் அதிகரிப்புச் செய்திருந்தது. இதனையடுத்தே நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழு இந்த முடிவை எடுத்திருக்கின்றது.

இதேவேளை, நுகர்வோர் பாதுகாப்பு ஆணைக்குழுவின் இவ்வுத்தரவுக்குத் தாம் கீழ்ப்படிய வேண்டியதில்லை எனவும், அரசாங்கத்துடன்தான் தாம் ஒப்பந்தம் செய்திருப்பதாகவும், ஆணைக்குழுவுடன் அல்ல என்றும் ஷெல் காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

# பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு பிரதமருடன் கூட்டமைப்பு ஆராயும்

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த வாரம் முற்பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கவுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியமர்வு குறித்தும் வலி. வடக்கு மக்களின் மறியற்போராட்டம் குறித்தும், மேற்படி சந்திப் பின்போது ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# நாடாளுமன்றில் கலாட்டா! பாணை வீசிய உறுப்பினர்கள்!!

## அஸ்வர் கிளப்பிய தோசை விவகாரம்



பொருட்களின் விலையுயர்வைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டமூல விவாதத்தில் காரசாரமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத் புஷ்பகுமார பாண் ஒன்றை சபைக்குக் கொண்டு வந்தார்.

பாணின் நிறையும் தரமும் குறைவடைந்துள்ளது. மக்கள் இதனை எப்படிச் சாப்பிட முடியும் என்று சபாநாயகரைப் பார்த்து கேள்வி கேட்ட அவர், பாணைத் துண்டு துண்டாகப் பிரித்து அரச தரப்புப் பக்கம் வீசினார். அரசதரப்பு உறுப்பினர்களும் அதனை எதிர்த்தரப்புப் பக்கம் வீசினர்.

பொ.ஐ.மு. உறுப்பினர் மங்கள சமரவீர, வீசப்பட்ட பாண்துண்டொன்றை எடுத்து மணந்து பார்த்து உட்கொண்டார். அருகில் இருந்த தினேஷ் குணவர்த்தன எம்.பிக்கும் ஒரு துண்டைக் கொடுத்தார்.

அப்போது அமைச்சர் அஸ்வர் எழுந்து, அதோ பாருங்கள், சபாநாயகரே!, அந்தப் பாண்துண்டை ருசித்துச் சாப்பிடுகிறார்களே? என்று கிண்டல் பண்ணினார். இதனையடுத்து, உரைநிகழ்த்திய பொ.ஐ. மு. உறுப்பினர் றிச்சட் பத்திரன, காஸ் விலை உயர்ந்துவிட்டது என்றார்.

இதனால் எல்லா உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன. பம்பலப்பிட்டியிலும் வெள்ளவத்தையிலும் உள்ள தோசைக் கடைகளுக்குப் போகமுடியாது. அங்கு தோசை நெருப்பு விலை என்றுகூற, அப்போது குறுக்கிட்ட அமைச்சர் அஸ்வர் -

உறுப்பினரே, நீங்கள் எங்கள் வீட்டிற்கு வாருங்கள். நான் உங்களுக்குத் தோசை சுட்டுத் தருகிறேன் என்றார். அப்போது எழுந்த எதிர்த்தரப்பு உறுப்பினர் மகிந்தானந்த - அஸ்வரே, நீங்கள் சபையில் ஒவ்வொரு நாளும் தோசை சுடுகின்றீர்கள் என்றகூற, சபையில் சிரிப்பு எழுந்தது.

தொடர்ந்து உரையாற்றிய றிச்சட் பத்திரன, வர்த்தக பாவனையாளர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்களே, நீங்கள் நல்ல மனிதர். கோட்டும் சூட்டும் அணிந்து கொண்டு சபைக்கு வருகின்றீர்கள். ஆனால், பொருட்கள் விலை அதிகரிப்பைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. எனது வீட்டிற்குக் காஸ் கொள்வனவு செய்யும் போதெல்லாம் நான் உங்களை நினைத்து ஏசுவேன். உங்களினால் காஸ் விலையைக் குறைக்க முடியாதா? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து உரையாற்றிய ஜே.வி.பி. உறுப்பினர் அந்துநெத்தி - அமைச்சரே, நீங்கள் கொழும் பிலிருந்து கொண்டுதான் பொருட்களின் விலையைத் தீர்மானிக்கிறீர்கள். தம்புள்ள சந்தியில் உள்ள சந்தைக்கு உங்களால் போகமுடியுமா? அங்குள்ள வியாபாரிகள் கருவாட்டுக் கூடையினால் உங்களுக்கு அடிப்பார்கள் என்று நீண்ட உரையொன்றை ஆற்றினார்.

விவாதத்திற்குப் பதிலளித்த அமைச்சர் ரவி கருணாநாயக்க குறைந்தபட்ச கல்வித்தகைமை உள்ளவர்கள்தான் இந்த சபைக்கு வரவேண்டும் என்றார். எனவேதான், புத்திக்கூர்மையுடன் உரையாற்றிய உறுப்பினர்களின் கேள்விகளுக்குத்தான் என்னால் பதிலளிக்க முடியும் என்று அமைச்சர் கூற, எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் எழுந்து சத்தமிட்டனர்.

அரச தரப்பு உறுப்பினர்களும் மேசையில் தட்டி, எதிர்த்தரப்பு உறுப்பினர்களைக் காரசாரமாக ஏசினர். கூச்சல் குழப்பத்தின் மத்தியிலும் அமைச்சர் தனது பதிலுரையை நிகழ்த்தி முடித்தார். பொருட்கள் விலையைக் குறைப்பதற்கும் குறிப்பாக, காஸ் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

சட்டமூலத்தை நிறைவேற்ற விடாது எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் சத்தமிட்டனர். அப்போது சபைக்கு வந்த பிரதமர், தனது ஆசனத்திலிருந்து எழுந்து உங்கள் திருத்தங்களைச் சபையில் முன் வையுங்கள், அதனை ஏற்றுக் கொள்கின்றோம் என்றதும், சபையில் அமைதி நிலவியது. திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது. (200)

# தாய்லாந்துப் பேச்சுக்களில் புதிய வரலாறு உருவானது!

## நோர்வே அமைச்சர் ஹெல்கிசன் பாராட்டு

(நகொன்பத்தம்)

இந்தப் பேச்சுக்களின் மூலம் புதிய வரலாறு ஒன்று உருவாக்கப்படுகின்றது எனத் தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப்பேச்சுக்களின் பின்னர் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் இரண்டு தரப்புக்களுக்கும் சேவை செய்யவும், அவர்களது கோரிக்கைகளைச் செவிமடுக்கவும் தயாராக இருக்கின்றோம்.

இந்தப் பேச்சுக்களில் சமஷ்டித் தீர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவு இப்பேச்சுக்கள் துரிதமாக நகர்வதையே காட்டுகின்றது. ஆனால், சமஷ்டி முறையைக் கொண்டு வருவதற்கு நீண்ட முறைகளைக் கையாளவேண்டும்.

தாய்லாந்துப் பேச்சுக்களில் கடுமையான பிரச்சினைகள் எழுந்தன. ஆனால், இரண்டு தரப்பு பிரதிநிதிகளுமே, அமைதிப் பேச்சுக்களில் உறுதியாக இருந்தனர். இது பாராட்டத்தக்கதொன்று. இருதரப்புமே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருவது பாராட்டத்தக்கது எனத் தெரிவித்தார்.

# அச்செழு விவசாய நிலங்களை ஒப்படைக்கப் படையினர் மறுப்பு!

## சமாதானம் வரும்வரை முகாம் இருக்குமாம்

(ஊரெழு)

அச்செழுப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் விவசாய விளைநிலங்களில் புதிதாகத் தகரக் கொட்டகைகளையும் மண் அரண்களையும் அமைத்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

படையினர் இங்கு புதிய முகாம்களைத் தகரங்களைக் கொண்டு அமைத்து வருகின்றனர். அத்துடன் விவசாய நிலங்களை அகழ்ந்து மண் எடுத்து மண் அரண்கள் அமைத்து வருகின்றனர்.

கடந்த வாரம் விவசாய சம்மேளனம் ஊடாகத் தமது விவசாய நிலங்களை ஒப்படைக்குமாறு படை அதிகாரிகளிடம் கேட்டபோது -

படை அதிகாரிகள் மீள விவசாய நிலங்களை ஒப்படைக்க மறுப்புத் தெரிவித்ததுடன் தீர்க்கமான சமாதானம் வரும்வரை 1,500 படையினர் அச்செழு முகாமில் தங்கியிருக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் தெரிவித்தனர்.

விடுவித்த வீடுகளுக்குப் பதிலாகத் தகரக் கொட்டகைகள் அமைத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் புரிந்துணர்வு ஒப்பந்த இயல்பு வாழ்க்கை தமக்குக் கிடைக்கவில்லை என விவசாயிகள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர்.

(96)

# தென்மராட்சி மின்சார விநியோகம் பூர்வாங்க வேலை அடுத்தமாதம்!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதிக்கு மின் விநியோகம் செய்வதற்கான ஆரம்ப வேலைகள் அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது ஏனைய பகுதிகளில் நடைபெற்றுவரும் மின்னிணைப்பு வேலைகள் இம்மாத நடுப்பகுதியில் முடிவடையும் என்றும்,

அதன்பின்பு தென்மராட்சிப் பகுதிகளுக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மின்விநியோகப் பணிகள் யாவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(கி,ச)

## வைத்தியசாலையில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் சிரமதானப் பணி நடைபெறுகின்றது.

யாழ். போதனா வைத்திய சாலை வளாகத்தில் புற்கள் பெரிதும் வளர்ந்துள்ளன. இதனால் நுளம்புப் பெருக்கமும் ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த வைத்தியசாலை ஊழியர்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டிருந்தமையைக் காணமுடிந்தது.

(ரா)

## வாடிக்கையாளர்கள் கடனை மீளச் செலுத்தாததாலேயே வங்கிகள் நிபந்தனை விதிக்கின்றன

(யாழ்ப்பாணம்)

வங்கிகளில் பெற்ற கடனை வாடிக்கையாளர்கள் மீளச் செலுத்தத் தவறுவதாலேயே, கடன் வழங்கும் விடயத்தில் நிபந்தனைகளை விதிக்க வேண்டியேற்படுவதாக மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

வங்கிகள் வாடிக்கையாளரிடமிருந்து திரட்டிய வைப்புக்களிலிருந்தே, கடன் வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. வாடிக்கையாளர்களின் வைப்புக்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டியது (வட்டியுடன்) வங்கிகளின் பொறுப்பாகும். எனவே கொடுக்கப்பட்ட கடன்களை முற்றுமுழுதாக வங்கிகள் அறவிட வேண்டியது அவசியமாகின்றது.

கடன் பெறுபவர்கள் நூற்றுக்கு நூறுவீதம் நேர்மையாக, ஒழுங்காகத் திருப்பிச் செலுத்துவதில்லை. இந்நிலையில் வங்கிகள் கடனை முறைப்படி அறவிட ஏதுவாகச் சில நிபந்தனைகளை விதித்தேயாக வேண்டும்.

ஆனால், நிபந்தனைகளைக் கூறி கடன் வழங்குவதைத் தட்டிக் கழிப்பது வங்கிகளின் நோக்கமல்ல. வங்கிகளில் கடன் பெற்றவர்கள் நேர்மையாகச் செலுத்தத் தவறியவிடத்து மீண்டும் கடன்களுக்கு மனுச்செய்யும் பொழுது கடன்கள் பெறுவதில் சிக்கல்கள் எழுவது தவிர்க்க முடியாததே.

கடன் பெறுபவர்கள் முறையாக விண்ணப்பிக்குமிடத்து, கடன் தேவைகள் சரியானதாக இருக்குமிடத்து எந்த வங்கியும் கடன் கொடுக்க மறுப்பதற்குச் சாத்தியமில்லை.

ஏனெனில் வங்கிகளின் வருமானம் பெருமளவு, பெறும் வட்டியிலேயே தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புகுமுக மாணவர்கள் மீது பல்கலையில் பகிடிவதை!

யாழ்.பல்கலைக்கழகத்தில் புகுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பகிடிவதை சம்பவங்கள் நடைபெறாது என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்தபோதிலும் இவ்வருடமும் பகிடிவதை சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

புகுமுக மாணவர்களை - குறிப்பாக மாணவிகளை பகிடிவதைக்குட படுத்தி சிரேஷ்ட மாணவர்கள் உளப பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

மாணவர்கள் பலர் குழுவாகச் சேர்ந்து மாணவிகளை மோசமான வார்த்தைகளால் கிண்டல் செய்து வருவதாகவும் பல சந்தர்ப்பங்களில் இது அத்துமீறி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகின்றது.

ஒரு சம்பவத்தில் பல மாணவர்கள் மாணவி ஒருவரைத் தனியாக வைத்து பகிடிவதைக்குட்படுத்திய போது அவர் அலறிக் கொண்டு ஓடியதாகவும் தெரியவருகிறது.

பகிடிவதைச் சம்பவங்கள் இடம் பெறத் தொடங்கியுள்ள நிலையில் இதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட வேண்டும் என பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

(லி)

# கடலோரக்காற்று திரைப்படமும் இயக்குநருடனான கலந்துரையாடலும்

## பல்கலைக்கழகத்தில் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகும் யாழ். திரைப்பட வட்டமும் இணைந்து வாரந்தோறும் வழங்கிவரும் வீடியோத் திரைப்படக் காட்சித் தொடர் வரிசையில் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில், ந.கேசவராஜன் இயக்கிய "கடலோரக் காற்று" எனும் திரைப்படம் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது. இத்திரைப்படக் காட்சியின் பின்னரான கலந்துரையாடல் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறும். கலந்துரையாடலில் இத்திரைப்பட இயக்குநர் ந.கேசவராஜன், கலாநிதி நா.சண்முகலிங்கன் ஆகியோர் பங்குபற்றுவர். ஆர்வலர்கள் யாவரும் இத்திரைப்பட ஆய்வில் பங்குபெறலாம் எனப் புற நிலைப்படிப்புக்கள் அலகு அறிவித்துள்ளது.

## தினத்திற்கு எட்டரை மணிநேரம் புலிகளின் குரல் விஸ்தரிப்பு !

புலிகளின் குரல் வானொலி எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளதாக புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி.தவபாலன் தெரிவித்தார்.

16 ஆம் திகதி முதல் புலிகளின் குரல் ஒலிபரப்பு காலை 6.30 மணி முதல் 8 மணிவரையும் இடம்பெறும். மாலையில் 3 மணிமுதல் 6 மணிவரை தமிழீழ வானொலி ஒலிபரப்பும், 6 மணிமுதல் 7 மணிவரை சிங்கள மொழி ஒலிபரப்பும், 7 மணி முதல் 10 மணிவரை புலிகளின் குரல் ஒலிபரப்பும் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ் ஒலிபரப்பு தமிழர் தாயகம் முழுவதும் தெளிவாக ஒலிக்கும் என்றும் ஏனைய பிரதேசங்களுக்கும் கேட்கக்கூடிய ஏற்பாடுகள் இடம் பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சனசமூக நிலைய கூட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு பரா. சாந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

(60)

# நுண்கலைப் பீடத்துக்குத் தெரிவானோர் பதிவுகள் 13 ஆம், 14 ஆம் திகதிகளில்!

நேற்றைய தொடர்ச்சி....

### சங்கீதம்

ஆர்.ஐங்கரன், ரீ.அமிர்தாம்பிகை, ஏ.அனற்மரிய கொலற்ரா, ஆர். அனிதா, எஸ்.அனெற்நிற்ரா, என். அன்பரசி, என்.அனுஷியா, பி.பாலலோஜினி, வை.கீதா, ஜே.ஜனிதா சாந்தி, ஏ.ஜெனிற்றா வினோதினி, என்.ஜெயராணி, எஸ்.காயத்திரி, என். கஜிதா, எஸ்.கலைச்செல்வி, எஸ். கலைவதனி, எம்.கலாநிதி, கே.காஞ்சனா, என்.கார்த்திகா, வை.கார்த்திகா, கே.கவிதா, எஸ்.கேதீஸ்வரி, வீ.கோகிலவாணி, கிருஷ்ணாளினி, எஸ்.லக்சுமி, என்.லோபனா, வீ.லோகினி, பீ.மருபியா, பி.மாதுமை, கே. மோகனதாஸ், வி.நயனா, கே.நிஷாந்தினி, எஸ்.நிஷாந்தினி, ஏ.நித்தியா, எஸ். பத்மரஜனி, வை.பிரகலாதன், ஏ.பிரியதர்ஷினி, என்.புனிதகுமாரி, கே.ரஜனி, எஸ்.ரஞ்சினி, எஸ்.இராசமலர், எஸ்.ரத்னாங்கி, ஆர்.ரேணுகா தேவி, எஸ்.ருஷாந்தி, கே.சக்திதாஸன், என்.சஞ்சீவன், ஜே.சஞ்யோபன், கே.சரஸ்வதி, எஸ்.சோபனா, எஸ். சிந்துஜா, கே.சிந்துஜா, எஸ்.சிவரூபி, எஸ்.சுகன்யா, எஸ். சுஜீபா, கே.சுயித்திரா, எஸ்.சுமிதா, ஆர்.சுதர்சினி, ஆர்.சுஜந்தினி, ரீ.தமிழினி, எஸ். தனுஜா, எஸ்.தீபலதா, கே.தீபிகா, ஜே.தீனஜா, ரீ.திவ்வியாஞ்சலி, எஸ். துர்க்காம்பிகை, என்.துஷ்யந்தி, வை.உமாரஜனி, சீ.வேணி மற்ரில்டா, ஏ.வினோதினி, எல்.யாழினி, வை. யோகாஞ்சனா, எஸ்.யோகேஸ்வரி, வீ.தங்கேஸ்வரன், எஸ்.அகிலா, பீ ஜெயனேசா.

### நடனம்

பீ.அகிலா, எஸ்.அமுதினி, கே. அனுஷா, ஜீ.சந்திரகலா, ஜே.கனமதி, ரீ.ஞானாமிர்தினி, ஜே.ஜஸ்மின்றோஸ், கே.ஜெயபாரதி, எஸ்.ஜெயதீபா, ஜே.கஜானி, பீ.கல்யாணி, கே. கமலினி, கே.கம்சவர்த்தினி, என். கார்த்திகா, எஸ்.கார்த்திகா, வீ.கார்த் திகா, கே.காயத்திரி, கே.கிரிஜா, எஸ்.கிருபாலினி, ஈ.கௌசிகா, கே. கிருஷாந்தினி, ரீ.லலிதா, கே.லதா யினி, வீ.லிங்கேஸ்வரி, கே.மெடோனா ஜெயாமினி, எஸ்.மீரா, ரீ.மீராபாரதி, எம்.மேகலா, ரீ.மிருதுளா, பி.முகுந்தினி, என்.நர்மலா, ஏ.நித்தியா, ஆர். பூங்கோதை, கே.பிறேமலா, ஆர்.ராதிகா, ரீ.ராதிகா, வீ.ராதிகா, என். ரேணுகா, மீ.ரோகிணி, எஸ்.சலுஷா, வை.சங்கீதா, கே.சர்மியா, எஸ். செல்வரஞ்சினி, எஸ்.சைலா, வி.சந்திரமோகன், கே.ஸ்ரீபிறேமினி. வி.சிவகௌரி, வை.சிவகரன், யே.சிவானலயா, எஸ்.சிவப்பிரியா, என்.சோபனா, எஸ்.ஸ்ரீகௌதமி, வி.ஸ்ரீயிவினி, வி. சுபாசினி, பீ.சுபத்திரா, ஆர்.சுபோஜினி, என்.சுஜானி, பீ.சுமித்திரா, எஸ். சுதர்ஜினி, ஆர்.சுதர்சினி, ஆர்.சுதர்சினி, வி.தட்சாயணி, எஸ்.தர்சினி, எம்.தயாளினி, எஸ்.தேவந்தி, எம். துசிக்கா, ரி.துசாயினி, என்.துஸ்யந்தினி, யூ.உமாமகேஸ்வரி, வி.உதயகீதா, எம்.வசந்தினி, வி.வதினி, வி. வினோஜா, ஆர்.வினோதினி, கே. யாழினி, ரி.யோகேஸ்வரி.

மேற்படி கற்கை நெறிகளுக்குத் தெரிவானோர்களில் சங்கீதம், சித்திரமும் வடிவமைப்புக்குத் தெரிவு செய்யப்பட்டோர் 13 ஆம் திகதியும் நடனம், பண்ணிசை ஆகியவற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டோரை 14 ஆம் திகதியும் - பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : இ.கிரிசாந்தி
முகவரி: சின்னாலடி, காரைநகர்.

பத்தாவது அகவையில்.



பெயர் : ம.அனுத்திஜா
முகவரி: வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------

முகவரி:--------------------

பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்



# சிறுவர் அரங்கம்

## முயலாரும் மரக்குற்றியும்

ஒரு பற்றைக்குள் மூன்று முயல்கள் இருந்தன. அவை மூன்றும் அழகானவை. மூன்று முயலாரும் ஒன்றாகவே திரியும், ஒன்றாகவே உணவு தேடிச் செல்லும். ஒன்றாக இருந்து சாப்பிடும்.

ஒருநாள் முயல்கள் ஒரு மரக்குற்றியைக் கண்டன. அதைத் தள்ளிக் கொண்டு வர எண்ணினர். "அதைக் தள்ளிக்கொண்டு வந்தால் மிக்க நல்லது" என்றார் ஒரு முயலார். "அதைத் தள்ளிக் கொண்டு வருவோம். எங்கள் பற்றையின் பக்கத்தில் வைப்போம். பாதுகாப்பாக ஒழித்துக் கொள்ளலாம்." என்றார் மற்ற முயலார்.

மூன்று முயல்களும் வந்தன. ஒன்றாகச் சேர்ந்து தள்ளின. "ம்...ம்... தள்ளுங்கோ" என்று மூத்த முயல் கத்தியது. தள்ளி யது. மரக்குற்றி சிறிதுதான் அசைந்தது.... என்ன செய்யலாம்...? இளைய முயல் யோசித்தது... நன்றாக யோசித்தது.

மரக்குற்றியை நெம்புகோலால் உயர்த்துவோம். (பாலர் பள்ளி ஆசிரியர் நெம்புகோல் இயக்கத்தைச் செய்து காட்ட வேண்டும்.) "அதன் கீழே இரண்டு உருளைகளை வைப்போம். இப்ப சுகமாகத் தள்ளிச் செல்லலாம்" என்றது இளைய முயல்.

முயல்கள் அப்படியே செய்தன. மரக்குற்றி இலகுவாக நகர்ந்து வந்தது.



– கலாநிதி சபா ஜெயராசா.

## சுப்பிரமணிய பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் சுவை நிறைந்த பாடல்களைப் பாடியுள்ளார். எல்லோரும் இவரைப் பாரதியார் என்று அழைப்பர்.

தமிழ் நாட்டிலேயே எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார். தந்தை பெயர் சின்னச்சாமி ஐயர். தாயார் பெயர் இலக்குமி அம்பாள். அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். அதிலும் தமிழில் அதிக விருப்பங் கொண்டார்.

மெலிந்த உருவம் உடையவர். தடித்த மேற்சட்டையும், தலைப் பாகையும அணிந்திருப்பார். வீரனைப்போல் கம்பீரமாய் நடப்பார். எல்லோரையும் பாண்டியா என்று அழைத்து இனியமொழி பேசுவார். ஏழைகளுக்கு இரங்கி உதவுவார். அவர் எதற்கும் அஞ்சமாட்டார். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். சிறுவர்களுக்காகப் பாடல்கள் பாடினார். அதனை விரும்பி சிறுவர்கள் பாடுவார்கள். சுப்பிரமணிய பாரதியார் என்றும் அழியாக் கவிதைகளைப் படைத்துள்ளார்.



இ.அகிலா,
தரம் - 5,
யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.

## உங்கள் கைவண்ணம்



க.சிவானுஜன்,
தரம் - 2 C,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.



அ.யசிக்கா
தரம் - 11 C,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

## வார்த்தை விளையாட்டு - 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 உ | | 2 | | ■ | 3 |
| | ■ | ண் | 4 | | |
| 5 . | | | | ■ | |
| 6 ர | 7 | 8 | ■ | 9 | 10 ரி |
| | 11 | ண | | ■ | |
| 12 | ம் | | | ■ | |

**இடமிருந்து வலம்**

1. நாம் வாழும் அகிலம்.
4. கேட்பதற்குப் பயன்படும் உறுப்பு.
5. தவறு செய்தவர்கள் அனுபவிப்பது.
6. துப்பாக்கிக் குண்டு.
9. சிங்கத்தின் ஒத்தசொல்.
11. காயம்.
12. கவிச் சக்கரவர்த்தி

**மேலிருந்து கீழ்**

1. கட்டளை.
2. உலகில் ஐந்து......... உள்ளன. (இதில் நாம் இருப்பது ஆசியா)
3. சாப்பாடு.
7. பெறுமதியான இது. பட்டை தீட்டினால் மிகவும் ஒளிரும்
8. காசு (தலைகீழாக)
10. மான் இனத்தில் ஒரு வகை.

முழுப் பெயர் : ........................................

கற்கும் பாடசாலை : ........................................

கற்கும் தரம் : ........................................

முகவரி : ........................................

............................ ............................

கையொப்பம் திகதி

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக் குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 15-01-2003
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 14

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**ரகுநாதன் சிந்துஜன்**
அரச வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

*2ஆம் பரிசு -*
**இராஜமனோகரன் நிரோஷனா**
254, கே.கே.எஸ். வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

*3ஆம் பரிசு -*
**ஹம்சினி உருத்திரேஸ்வரன்**
36/2, செட்டித்தெரு,
நல்லூர்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## வார்த்தை விளையாட்டு - 14
### சரியான விடைகள்

இடமிருந்து வலம்

1. மணிக்கூடு
3. பந்து
4. துலா
5. தரம்
6. பல்
7. கனி
8. அகரம்
9. அம்மி

மேலிருந்து கீழ்

1. மரதன்
2. கூந்தல்
3. பம்பரம்
4. துக்கம்
10. தீ

## விடுகதைகளும்

1. ஒரு டப்பிக்குள் இரு தைலங்கள். அது என்ன?
2. பல் இருக்கும் ஆனால் கடிக்காது. அது என்ன?
3. சிறகு இல்லை. ஆனால் பறக்கும். அது என்ன?
4. பல பேர் கட்டிய வீடு ஒருவன் கண்பட்டு உடைந்தது. அது என்ன?

## விடைகளும்

1. முட்டை
2. சீப்பு
3. புகை
4. தேன்கூடு

**து.விதுஷன்**
**தரம் 4**
யா/இந்து ஆரம்பப் பாடசாலை

## இரண்டின் தனித்துவம்

1. இருவர் - அம்மா, அப்பா
2. இரு சுடர் - சூரியன், சந்திரன்
3. இருநிதி - சங்கநிதி, பதுமநிதி
4. இருமரபு - தாய்மரபு, தந்தைமரபு
5. இருதிணை - உயர்திணை, அ∴றிணை
6. இருமை - இம்மை, மறுமை
7. இருபொருள் - கல்வி, செல்வம்
8. இருபற்று - அகப்பற்று, புறப்பற்று

**மு.செந்தூர்,**
**கொக்குவில்.**

# உலக மொழிகள்

உலக மொழிகளின் எண்ணிக்கை பற்றிய திருப்திகரமான ஒரு கணக்கெடுப்பு இதுவரை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. பலவகை கணக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன; எண்ணிக்கை வேறுபாடு ஆயிரக்கணக்கில். இதற்குரிய முக்கிய காரணம் மொழியையும், வட்டார வாழ்க்கையையும் எவ்வாறு வேறுபடுத்தி அறிவது என்பதில் உள்ள குழப்பமேயாகும். எண்ணிக்கையில் சுமார் 2,500 முதல் 5,000 வரையான மொழிகள் உள்ளன. என்றாலும், இவற்றில் எது முதன்மையானது எனக் கூறமுடியாது.

தற்போதைய நிலையில் உலகில் சுமார் 3,000 இற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. என்றாலும் 12 மொழிகளே பரவலாக எங்கும் பேசப்பட்டு வருகின்றன. இந்த மொழிகள் ஒவ்வொன்றையும் சுமார் 100 மில்லியன் மக்களுக்கும் அதிகமானோர் பேசி வருகின்றனர். ஏனைய அனைத்து மொழிகளை விடவும் ஆங்கிலமே பெரும்பான்மையான மக்களால் பேசப்பட்டு வருகின்றது. இதைத் தொடர்ந்து வருவது மண்டாரின், சீனம், ஸ்பானிஷ், இந்தி, அரபிக், பெங்காளி, ருஷ்யன், போர்த்துக்கீஸ், ஜப்பானீஸ், ஜேர்மன், மலாய், இந்தோனேஷியா, மற்றும் பிரெஞ்சு என்பனவாகும்.

## சர்வதேச குறியீடுகள்

1) புறா - சமாதானம்
2) சக்கரம் - வளர்ச்சியைக் குறிக்கும்.
3) தாமரை - பண்பாடு, நாகரிகம்.
4) கறுப்புக்கொடி - துக்கம்
5) எலும்பு நடுவில் மண்டையோடு - ஆபத்து
6) சிவப்பு விளக்கு - ஆபத்து நிறுத்து
7) கையில் தராசு ஏந்திய பெண் - நீதி
8) அரைக்கம்பத்தில் கொடி - இரங்கல்
9) தலைகீழாகக் கொடி - துன்பம்
10) வெள்ளைக் கொடி - சமாதானம்.

**யோ.தர்சிகா**
*தரம் - 8*
கிளி/பு.ம.வித்தியாலயம்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................
பிறந்த திகதி :......................................
ஆர்வமுள்ள துறைகள் :......................................
:......................................

.................. ..................................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## முக்கிய ஏரிகள்

| ஏரிகள் | அமைந்த நாடுகள் |
|---|---|
| கஸ்பியன் கடல் | ரஷ்யா, ஈரான் |
| சுப்பீரியர் | அமெரிக்கா, கனடா |
| விக்ரோறியா | ஆபிரிக்கா |
| அரல் | ரஷ்யா |
| ஹூரோன் | அமெரிக்கா, கனடா |
| மிச்சிக்கன் | அமெரிக்கா |
| தாங்காங்கியா | தன்சானியா |
| பெய்கல் | ரஷ்யா |
| கிரேட் பீர் | கனடா |
| மலாவி | மலாவி |
| கிரேட் சால்வி | கனடா |
| எரி | அமெரிக்கா, கனடா |
| வின்னிபெக் | கனடா |
| ஒனஅடாரியா | அமெரிக்கா, கனடா |
| பல்கஷ் | ரஷ்யா |
| லடோகா | ரஷ்யா |
| சாட் | ஆபிரிக்கா |

## உங்களுக்குத் தெரியுமா?

1. புவிக்கு அண்மையில் உள்ள கோள் யாது?
   *சுக்கிரன்*
2. இலங்கையில் உள்ள மொத்தப்பாடசாலைகள் எத்தனை?
   *10,500 பாடசாலைகள்*
3. விண்வெளியில் பறந்த முதல் இந்தியர் யார்?
   *ராகேஸ் சர்மா*
4. சிறுவானியலாளன் என உலகப் புகழ்பெற்ற சிறுவன் யார்?
   *கஒறு என்ற சிறுவன்*
5. கண்களை அரிக்கும் வாயு எது?
   *குளோரின்*

**அருணகிரிநாதன் விபூஷணன்**
தரம் 5
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## இவள் தான் தாய்

பத்து மாதம் சுமந்து பெற்றவள் தாய்
பாசமாய் என்றும் உறவாடுபவள் தாய்
நிலத்தில் வேர் ஊன்றியது போல
ஆழமான அன்பு தந்தவள்

இரத்தத்தைப் பாலாக்கி
இராகத்தைத் தாலாட்டாக்கி
முத்தத்தால் கொஞ்சி
கண்ணிமையாய் காப்பாள் தாய்.

வீறிட்டு நாம் அழுதால் - கண்
நீரிட்டு இவள் அழுவாள்
நோய் வந்து நாம் வாடினால் - இவள்
ஓடோடிக் காத்திடுவாள்.

கண்ணீர் எமக்கு வந்தால் - இவள் நெஞ்சில்
செந்நீர் பெருக்கெடுக்கும்
மண்ணில் நாம் விழுந்தால் - இவள் பதறி
தன்னையே நொந்திடுவாள்.

**கரவை - பாலா.**

## எனது பாடசாலை

1. எனது பாடசாலையின் பெயர் - யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி
2. எனது பாடசாலை தெல்லிப்பளையில் அமைந்துள்ளது.
3. 1 தொடக்கம் 13 வரை வகுப்புக்கள் உள்ளன.
4. எனது பாடசாலை அதிபர் பெயர் - திரு.பொ.சுந்தரலிங்கம்.
5. எனது பாடசாலையில் 51 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள்.

**ஜெ.ஜெயக்கமலன்**
**தரம் 5 A**
**யா/மகாஜனக் கல்லூரி**



கைதடி பராசக்தி பாலர் பாடசாலையில் அண்மையில் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. அவ்விழாவில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அந்த கலை நிகழ்ச்சியின் ஒரு காட்சி இது. (31)

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



*முழுப்பெயர்:-*
**தனபாலசிங்கம் வைதேகன்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
*கற்கும் தரம் :-* 3
*ஆர்வமுள்ள துறைகள் :-*
வானொலி கேட்டல், கதைப்புத்தகம் வாசித்தல்.



*முழுப்பெயர்:-*
**அன்பழகன் தெய்வீகன்**
*கற்கும் பாடசாலை :-*
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
*கற்கும் தரம் :-* 10
*ஆர்வமுள்ள துறைகள் :-*
பத்திரிகை வாசித்தல், கல்விசார் செயற்பாடுகள்.



*முழுப்பெயர்:-*
**ரவிச்சந்திரன் காமறாஜ்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ யூனியன் கல்லூரி
*கற்கும் தரம் :-* 7
*ஆர்வமுள்ள துறைகள் :-*
விளையாட்டுத்துறை, சித்திரம், ரீவி பார்த்தல்.



*முழுப்பெயர்:-*
**சின்னத்தம்பி சுரேஷ்**
*கற்கும் பாடசாலை :-*
யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
*கற்கும் தரம் :-* 9
*ஆர்வமுள்ள துறைகள் :-*
சித்திரம், பத்திரிகை வாசித்தல், ரீவி பார்த்தல்.

*முழுப்பெயர்:-*
**வரதராஜா சயந்தன்**
*கற்கும் பாடசாலை :-*
கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம்
*கற்கும் தரம் :-* 9
*ஆர்வமுள்ள துறைகள் :-*
விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.

*முழுப்பெயர்:-*
**இந்திரபவன் சுபிதா**
*கற்கும் பாடசாலை :-*
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
*கற்கும் தரம் :-* 7
*ஆர்வமுள்ள துறைகள் :-*
முத்திரை சேகரித்தல், பத்திரிகை வாசித்தல்.

*முழுப்பெயர்:-*
**ஜேசுதாசன் ஜெனத் நிஷாணி**
*கற்கும் பாடசாலை :-*
யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
*கற்கும் தரம் :-* 6
*ஆர்வமுள்ள துறைகள் :-*
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல், நடனம், முத்திரை சேகரித்தல், ரீவி பார்த்தல்.

*முழுப்பெயர்:-*
**பாலசுப்பிரமணியம் சதீசன்**
*கற்கும் பாடசாலை :-*
யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்.
*கற்கும் தரம் :-* 6
*ஆர்வமுள்ள துறைகள் :-*
ரீவி பார்த்தல், முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். -திருக்குறள்

## நமது நோக்கு

### பகிடிவதை என்னும் பாதை தவறிய செயல்

யாழ். பல்கலைக்கழகத்தில் புகுமுக மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் - அம் மாணவர்களைப் பகிடிவதைக்குள்ளாக்கும் வேதனை தரும் சம்பவங்களும் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசிக்கின்ற புகுமுக மாணவர்களை, சிரேஷ்ட மாணவர்கள் உடல், உள ரீதியாகவோ துன்புறுத்தாது - நட்புறவுடன் அவர்களுடன் உறவாடி ஆரோக்கியமான சூழல் ஒன்றை உருவாக்க வேண்டும் என, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கைவிடுத்திருந்த போதும் - இம்முறை வழக்கமான பகிடிவதைகள் குறைந்து விடுமென்று எதிர்பார்த்த போதும் - அந்த எதிர்பார்ப்புக்களை பொய்யாக்கும் வண்ணம் - பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்கள் சிலர் தொடர்ந்தும் பகிடிவதைகளில் ஈடுபட்டு வருவதாக- புகுமுக மாணவர்களும் பெற்றோர்களும் மிகுந்த மனக்கசப்பு அடைந்துள்ளனர்.

பகிடிவதை என்ற ரீதியில் - நெறிமுறையற்ற வார்த்தைப் பிரயோகங்களும், வக்கிரமான வெளிப்படுத்துகைகளும் இந்த முறையும் சர்வசாதாரணமாக நடைபெற்று வருவதைக் கண்கூடாகக் காணவும் முடிந்தது.

புகுமுக மாணவர்களின் விரிவுரைகளுக்கு இடை நேரங்களிலும், விரிவுரைகள் முடிந்த பின்னர் - புகுமுக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் வைத்தே பகிடிவதைக்குள்ளாக்கப்படுவது இம்முறையும் நடைபெற்று வருகின்றது.

நட்புடனும், நல்லுறவுடனும் ஆரோக்கியமாக நடைபெற வேண்டிய சிரேஷ்ட - புகுமுக மாணவர்களின் அறிமுகம் - நெறிமுறையற்ற வார்த்தையாலும், அணுகு முறைகளாலுந்தான் ஆரம்பமாக வேண்டுமென்ற 'பல்கலைக்கழக சம்பிரதாயத்தை' - கண்மூடித்தனமாக, சிந்திக்கும் வகையற்றுப் பின்பற்றும் இத்தகைய மாணவ சமுதாயத்தை எண்ணும்போது - இவர்கள் பல்கலைக்கழகக் கல்வியினூடாக 'ஒழுக்கவியலைப்' பெற்றார்களா என்பதையே சந்தேகிக்க வைக்கின்றது.

பல்கலைக்கழகத்தை - சமூகத்திலிருந்து பிரித்தெடுத்த தனியொரு உலகமாகக் கருதி 'முன்னோர்கள்' உருவாக்கிய மாயைக்குள் நின்று - எவ்வகையிலும் சமூகச் சிந்தனையற்ற விதமாக - புகுமுக மாணவர்களுக்கு உடல், உள ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் 'வக்கிர எண்ணம்' இன்னும் பல்கலைக் கழகத்தை விட்டு மறைந்துபோகாதது கண்டிக்கத்தக்கதாகின்றது.

பல்கலைக்கழக வளாகத்தைவிட்டுக் கடந்து வந்தால் - இந்தச் சமூகம் எதிர்பார்த்து நிற்கின்ற புத்திஜீவிகளாக, சமூகப் பொறுப்புள்ளவர்களாக உருவாகாமல் - அடக்குமுறை மனோபாவத்தைக் கற்றுத் தேர்ந்தவர்களாகவும், நல்லுறவைப் பேணத்தெரியாதவர்களாகவும் உருவாகினால் - அதனைச் சமூகம் ஏற்றுக்கொள்ளாதென்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தனியே கல்வியை மட்டுமல்ல, உயரிய மனிதப் பண்புகளை, தலைமைத்துவத்தினை, ஒழுக்கத்தினை, சமூகப் பொறுப்புணர்வினை, தாய்நாட்டுப் பற்றினை வளர்த்துவிட வல்ல பல்கலைக்கழகத்தில் - இவ்வாறான சமூகத்திற்கு ஒவ்வாத செயல்களை அரங்கேற்றுவதென்பது - அப்பல்கலைக்கழகத்தின் கௌரவத்தையே சிதைத்துவிடுவதாகும்.

சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய அத்துமீறல்களைத் தட்டிக்கேட்கவும், தடுக்கவும் சகமாணவர்கள் முன்வரவேண்டும், முயற்சி செய்ய வேண்டும்.

'உன் நண்பர்களைச் சொன்னால், உன்னைப் பற்றிச் சொல்ல முடியும்' என்று அறிஞர் ஒருவர் கூறியதுபோல- தங்களது நண்பர்கள் இவ்வாறு முறைகேடாக நடப்பதை ஊக்குவிப்பாளர்களாகாமல் அல்லது கண்டும் காணாமல் இருப்பவர்களாக இல்லாமல் - சகமாணவர்கள் அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டும்.

பல்கலைக்கழக நிர்வாகம் இவ்விடயத்தில் அதிக கவனம் எடுத்து - இந்தப் 'பாரம்பரியத்தை' நீக்கிவிட வழிகாண வேண்டும்.

இது ஒன்றும் முடியாத விடயமல்ல. ஏற்கனவே - மேற்கிலும், உலகில் சிறந்த பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் -பகிடிவதை முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில் - இத் துயரத்தைச் சுமப்பவர்களாக மாணவர்களை விட்டுவிடாது, தகுந்த நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

தரம் ஒன்றில் இணையும் மாணவருக்கே வரவேற்பு விழா வைத்து, அன்பளிப்புக்கள் கொடுத்து, வீதி உலாவும் கூட்டிச் சென்று - பாடசாலையை நட்புடன் அறிமுகமாக்கும் நிகழ்வுகள் நடைபெறும், இன்றைய நாட்களில் - பல்கலைக்கழகம் மட்டும் காட்டுமிராண்டித்தனமான பகிடிவதைகளால்தான் - புகுமுக மாணவர்களை எதிர்கொள்ள வேண்டுமா...?

சிந்தியுங்கள் சகோதரர்களே! போரால் சிதைந்த பூமி, நீங்களும் தோள்கொடுத்துத் தூக்கிவிடுவீர்கள் எனக் காத்திருக்கும்போது - உங்கள் எண்ணங்களை, பெறுமதிமிக்க நேரத்தை- இந்தச் சின்னத்தனங்களுக்குள் தொலைத்து விடாதீர்கள்!

உங்கள் சிந்தனையும் திறமையும் - உங்களுக்கும் சமூகத்திற்கும் ஆக்கபூர்வமானதாகட்டும்.

# உங்கள் ஊகங்களை எழுதாதீர்! நேரில் அவதானித்து எழுதுங்கள்!!

## செய்தியாளர் மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம்

***தாய்லாந்தில் நடைபெற்ற நான்காவது சுற்று சமாதானப்பேச்சுவார்த்தையின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு.***

**பு**லிகள் தமது அமைப்புக்கு வயதில் குறைந்த சிறுவர்ளை ஆட்சேர்த்து வருகிறார்களே? ஆயுதங்களைக் கையளிப்பது பற்றி இன்னமும் நீங்கள் சிந்திக்காதது ஏன்? இந்தச் சமாதானப் பேச்சு முயற்சிகளில் ஒரு தந்திரோபாய நகர்வாகவே புலிகள் கலந்துகொள்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றதே? காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்காப் படையினரின் கதி என்ன? என, தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக எழுப்பப்பட்ட பல சந்தேகங்களுக்கும், குழப்பங்களுக்கும் வியாழன்று தாய்லாந்து நகொன்பத்தம் நகரின் றோஸ் கார்டினில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெளிவான பதில்களை வழங்கினார்.

வெறும் ஊகங்களுடனோ அல்லது தவறான தகவல்களுடனோ உங்கள் மனவிருப்பங்களைச் செய்திகளாக வெளியிடாது, உண்மையான நிலைமையை நேரில் வந்து பார்த்து அவதானித்துத் தகவல்களை வெளியிடுங்கள் என்று அவர் அங்கு செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது வேண்டுகோள் விடுத்தார்.

தாய்லாந்தில் றோஸ் கார்டின் உல்லாச விடுதியில் விசேடமாக ஒதுக்கப்பட்ட கட்டடத்தில் நடைபெற்ற, ஸ்ரீலங்கா அரசாங்கம் - விடுதலைப் புலிகளுக்கு இடையிலான நான்காம் கட்டப் பேச்சுக்களின் இறுதிநாளன்று, தாய்லாந்து நேரப்படி மாலை 3 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

உலகின் பலபாகங்களிலிருந்தும் வந்து கலந்துகொண்ட பல ஊடகவியலாளர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு, தமது வினாக்களைத் தொடுத்தனர். அவை அனைத்துக்கும் அன்ரன் பாலசிங்கம் தெளிவான பதில்களை வழங்கினார்.

மாநாட்டின் ஆரம்பத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களைத் தமது அமைப்புடன் இணைத்துக்கொள்வது பற்றிய கேள்வி எழுப்பப்பட்டது. இது தொடர்பில் ஆரம்பத்தில் பதிலளித்த அன்ரன் பாலசிங்கம், அந்தக் குற்றச்சாட்டை முழுமையாக மறுத்துரைத்தார். "நாம் அவ்வாறு சிறுவர்களை எமது அமைப்பில் இணைத்துக்கொள்வதில்லை. இதனை நான் அழுத்திக் கூறவிரும்புகிறேன். பதினெட்டு வயதுக்குக் குறைந்த சிறுவர்களை எமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதில்லை என்கின்ற முடிவை, எமது கொள்கையாக நாம் திட்டவட்டமாகக் கடைப்பிடித்துவருகிறோம்.

அவ்வாறு இயக்கத்தில் இணைந்து கொண்டவர்கள் யாரும், பதினெட்டுவயதுக்குக் குறைந்த சிறுவரகளாக இனங்காணப்பட்டால், நாம் அவர்களை அவர்களது பெற்றோர்களிடம் மீள ஒப்படைத்து வருகிறோம். சிறுவர்கள் போரில் பயன்படுத்தப்படுவது தொடர்பான ஐ.நா.அறிக்கைக்கு அமைவாகவே நாம் செயற்பட்டு வருகிறோம். இந்நிலையில் இந்தக் குற்றச்சாட்டு அபத்தமானது" என்று பாலசிங்கம் அங்கு தெரிவித்தார். இதுபற்றி அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

"இந்தப் பிரச்சினை எமது பிரதேசத்தின் சமூக, பொருளாதார நிலைமைகளுடன் தொடர்புடையது. இதனைத் தனித்த ஒரு பிரச்சினையாக நீங்கள் நோக்கமுடியாது. எமது பிரதேசத்தின் பொருளாதாரநிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் வறுமையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிறுவர்கள் பலர் பட்டினியால் வாடுகிறார்கள். இதனால், அவர்கள் தமக்கு ஏதாவது ஒரு நிவாரணம் கிடைக்கவேண்டும் என்று எதிர்பர்க்கிறார்கள்.

இதனால் அவர்கள் எம்மால் நடாத்தப்பட்டுவருகின்ற பல நலன்புரி நிலையங்களில் இணைந்து வருகின்றார்கள். இந்த அப்பாவிச் சறுவர்களின் அவலநிலையைப் போக்காமல், அவர்களை நாம் படைக்குச் சேர்த்துக்கொள்வதாக நீங்கள் எம்மீது குற்றம் சுமத்தமுடியாது.

இவ்வாறு போரினாலும், பல பொருளாதாரப் பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவிச் சிறுவர்களைப் பராமரிப்பதற்கென நாம் பதினைந்து முதல் இருபது வரையிலான நலன்புரி நிலையங்களை நடாத்திவருகிறோம். அங்கே இந்தச் சிறுவர்களுக்கு வேண்டிய உணவு மற்றும் ஏனைய தேவைகள் நிறைவு செய்யப்படுவதுடன், அவர்களுக்குக் கல்வி போதிக்கவும்படுகிறது.

இப்போது நாம் இத்தகைய எமது நிலையங்களைத் தொடர்ந்து கொண்டு நடாத்துவதற்குச் சர்வதேச நிதி உதவிகளை நாடிநிற்கிறோம். இந்த நிலையங்களை நீங்கள் நேரடியாக வந்து பார்வையிடவேண்டும். அங்கே அவர்களுடைய நிலையை நீங்கள் நேரடியாக அவதானித்துவிட்டு உங்கள் செய்திகளை வெளியிடவேண்டும்.

தற்போது நாம் ஐ.நா.சிறுவர் நிதியத்தை, எமது பிரதேசத்துகத்து வந்து இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு அழைப்பு விடுத்துள்ளோம். அதுதவிரவும் பல்வேறு ஊடகவியலாளர்களையும், இராஜதந்திரிகளையும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் வந்து இந்த நிலையங்களைப் பார்வையிட்டு எமக்கு அவற்றைத் தொடர்ந்து நடாத்துவதற்கு உதவுமாறு நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இவ்வாறு வந்து வடக்கு- கிழக்கில் என்ன நடைபெறுகிறது என்று பார்ததறிந்து கொள்ளாமல் சில ஊடகவியலாளர்கள் தாங்கள் விரும்பியதை எழுதிவருகிறார்கள்" என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவது தொடர்பான கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பாலசிங்கம்,

"நாம் ஐ.ஆர்.ஏ. போன்றோ, பாலஸ்தீன விடுதலை அமைப்புப் போன்றோ ஏதோ சிறியதொரு இயக்கத்தை நடாத்திவருகிறோம். எம்மிடம் சிறியதொகை ஆயுதங்கள்தான் இருக்கின்றன என்ற தொனியில் பேசுகிறீர்களே? நிலைமை அப்படியல்ல. எம்மிடம் மிகப்பெருந்தொகையான ஆயுதங்கள் உள்ளன. ஆட்லறிகள், பீரங்கிகள் உண்டு. நாம் ஒரு மரவு வழிப்படையணியாகவே இருந்து வருகிறோம். இருபது வருடங்களாகத் தமிழர்களின் உரிமைகளை மீட்பதற்காக நாம் போராடி வருகிறோம்.

இப்போதுதான், இந்தப் போராட்டத்துக்கு ஒரு தீர்வினைக் காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது இன்னமும் பலபடிகள் முன்னேறவேண்டியதிருக்கிறது. நாம் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கியாகவேண்டும். அதன் பின்னரே ஒரு நிரந்தரத்தீர்வு எட்டப்படமுடியும். இன்னமும் அது ஒரு முழுமையடையாத நிலையில் நாம் எப்படி ஆயுதங்களைக் களையமுடியும்?



ஒரு நிரந்தரத்தீர்வு எட்டப்படாமல் நாம் ஆயுதங்களைக் களைவதென்பது தற்கொலைக்கு ஒப்பானது" அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இந்தச் சமாதானப் பேச்சு முயற்சிகளில் ஒரு தந்திரோபாய நகர்வாகவே கலந்துகொண்டுள்ளார்கள் என்று கருதப்படுகிறதே என்று, கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அன்ரன் பாலசிங்கம்,

"இந்தக் கருத்து எங்கிருந்து வருகிறது என்பதை நான் அறிவேன். இந்துப் பத்திரிகை ஆசிரியர் ராம் மற்றும் பத்தி எழுத்தாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் ஆகியோர் இத்தகைய கருத்துத் தொனிக்க அண்மையில் சில கட்டுரைகளை எழுதியிருந்ததை நான் பார்த்தேன்.

இவர்கள் ஏன் இப்படியெல்லாம் எழுதுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நாம் ஏதோ சமஷ்டித் தீர்வு என்பதை ஒரு தந்திரோபாய அடிப்படையிலேயே முன்வைப்பதாகவும், அதை அரசு ஒத்துக்கொள்ளாதவிடத்து நாம் சர்வதேசச் சமூகத்தின் முன்னால் அதனைக்கூறி இந்தப் பேச்சு முயற்சிகளிலிருந்து விலகத் திட்டமிட்டுள்ளோம் என்றும், அந்தக் கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இது முற்றிலும் தவறான கருத்துக்கள். நாம் இதயசுத்தியுடனே பேச்சுக்களில் ஈடுபட்டுவருகிறோம். இந்தப் பேச்சு முயற்சிகளின் மூலம் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரத்தீர்வு எட்டப்படவேண்டும் என்கின்ற எதிர்பார்ப்புடனே நாம் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். இதில் நாம் வெளிப்படையாகவே செயற்பட்டு வருகிறோம். இதில் எதுவித இரகசியத் திட்டங்களும் கிடையாது" என்று குறிப்பிட்டார்.

காணாமல்போன படையினர் பற்றி அங்கு எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அவர்,

அத்தகைய படையினர் எவரும் புலிகள்வசம் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். "ஒவ்வொரு சமரின் போதும் நாம் அதில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை விபரங்களை படைத் தளபதிகளுக்கும், ஐ,சி.ஆர்.சிக்கும் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துவந்தோம். ஆனால், போரில் கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கையைச் சிங்கள மக்கள் அறிந்தால் குழப்பம் ஏற்படும் என்பதற்காக சிறிலங்கா அரசாங்கம் இந்தப் படையினரது சடலங்களைப் பொறுப்பேற்க மறுத்துவந்தது.

இவ்வாறு கொல்லப்பட்ட 25000 படையினரை அவர்கள் போரில் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கிறார்கள்" என்று குறிப்பிட்ட பாலசிங்கம்,

"இவ்வாறு காணாமல்போன படையினர் என்று ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள படையினர் அனைவரும் போரின்போது கொல்லப்பட்டுவிட்டார்கள் என்பதை நாம் இங்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவிரும்புகிறோம்" என்று தெளிவாகக் குறிப்பிட்டார்.

முழுவதும் ஆங்கிலத்திலேயே நடைபெற்ற இந்த மாநாட்டின் முடிவில் தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய பாலசிங்கம், பாதுகாப்புவலயப் பிரச்சினை குறித்துத் தாம் தெளிவாகவே இருப்பதாகவும், இதுவிடயத்தில் யாழ். படைத் தளபதி பொன்சேகாவும், முப்படைத் தளபதியான ஜனாதிபதி சந்திரிகாவும் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதால், அரசுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு அவகாசம் வழங்கும் வகையில், இந்திய இராணுவத் தளபதி நம்பியாரின் ஆலோசனைகள் சிறிலங்கா அரசுக்கு வந்துசேரும் வரையில் பொறுத்திருந்து பார்ப்போம் என்று தெரிவித்தார். எவ்வாறாயினும், இந்த பாதுகாப்பு மற்றும் இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கான உபகுழுவின் செயற்பாடுகளில் இனிமேல் தாம் பங்கேற்கப் போவதில்லையெனவும், இராணுவத் தளபதிகளின் கடும்போக்குத் தன்மையாலேயே இனிமேல் இதில் பங்கேற்பதில் அர்த்தமில்லை எனத் தேசியத் தலைவர் தமக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

தாய்லாந்திலிருந்து றுஷாங்கன்

# ஆசிய நாடுகளிடையே வளரும் முரண்பாடுகள்; மேற்குலகின் குளிர்காயும் தந்திரோபாயமா?



கடந்தவாரம் ஆசியா முழுவதும் பதற்றம் நிறைந்ததாகவே அமைந்திருந்தது. ஈராக்கை நோக்கிய அமெரிக்க - பிரிட்டன் கூட்டணியின் இராணுவக் குவிப்பு, வடகொரிய அணுவாயுதத் தயாரிப்புக்கான தயார்ப்படுத்தல், இந்திய - பாகிஸ்தான் நாடுகளிடையே சூடான அரசியல் விவாதம் எனத் தொடர்ந்து அக்னி - I நடுத்தர ஏவுகணைப் பரிசோதனைவரை நடந்து முடிந்தது.

இது பாகிஸ்தானின் ஏவுகணைப் பரிசோதனைக்குப் பதிலடியாக நிகழ்ந்ததுடன், அக்னி - I, அணுவாயுதங்களை தாங்கிச்சென்று தாக்கும் வல்லமை கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் போர் மேகம் குழுமியிருக்கும் பிரதேசமாக ஆசியா விளங்குகின்றது. போரை ஆசியாவிற்குள்ளேயே நிகழ்த்தி முடிக்க விரும்பும் மேற்கு நாடுகளின் அரசியல் தந்திரங்களுக்குள் பலியாகிப் போகும் நிலையிலேயே ஆசிய அரசுகளின் தலைமைகளும், அவர்களுக்கிடையிலான போட்டிகளும் அமைந்திருக்கின்றன. இந்நாடுகளை எப்படி மேற்கு உலகம் கையாள விரும்புகின்றது என்பதை நோக்குவோம்.

கடந்த காலத்தில் பல சம்பவங்கள் வரலாற்றில் நிகழ்ந்து முடிந்தாலும், மிக அண்மையில் மேலெழுந்த இரண்டு சம்பவங்களை மையப்படுத்தி, அக்கருப்பொருளை விளங்கிக கொள்ளலாம். குறிப்பாக, வடகொரிய விவகாரம் - கிழக்காசிய அரசியலில் பெரும்பரபரப்பை கிளப்பியிருந்தது.

வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனை - தென்கொரியாவை மட்டுமல்ல, ஜப்பானையும் எதிர்காலத்தில் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் என்ற பிரசாரமும் அதற்குச் சார்பான நடவடிக்கைகளும்- இந்தவகையில் முக்கியமானதாகும்.

அதனை முடுக்கிவிட்டதில் முன்னோடி அரசு அமெரிக்காவாகும். அமெரிக்காவிற்கும் - வடகொரியாவுக்குமான விரிசலை, தென்கொரியா-ஜப்பான் சார்ந்த விரிசலாக மாற்றுவதில்- அமெரிக்கர்கள் வெற்றிகாண முயன்றனர். அதன் பிரதிபலிப்பாக-ஜப்பானிய, தென்கொரிய விசேட தூதுவர்கள் சீனாவிற்கு மாறி மாறி விஜயம் மேற்கொண்டதுடன், இந்தியாவிற்கும் ஜப்பானியத் தூதுவர் விஜயம் செய்தமை கவனிக்கக் கூடியதாகும்.

மேலும், ரஷ்யாவிற்குப் பயணம் செய்த தென்கொரியர்கள், வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனையைத் தடுக்கப் பல பேரம்பேசல்களை ரஷ்யாவுடன் நடாத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

வடகொரியர்களின் அணுவாயுதப்பரிசோதனை நேரடியாக அந்நாட்டின் திறமையையும் தன்னாதிக்கத்தையும் பாதுகாக்குமாயினும், மறைமுகமாக ஈராக் மீதான போருக்கான தயார்படுத்தலைக் குழப்பத்திற்கு உள்ளாக்கியதுடன், காலதாமதப்படுத்துவதிலும், நெருக்கடியை ஏற்படுத்துவதிலும் கணிசமான வெற்றியைப் பெற்றுவிட்டது.

இதுவே- ஆசியாவின் ஆட்சித் தலைமைகளுக்கிடையில் ஏற்படவேண்டியது. இவ்வாறான ஒத்திசைவான அரசியல் தந்திரத்தைக் கையாள ஆசியா தயாராகுமேயாயின், மேற்குநாடுகளுக்கும் அவர்களின் படைகளுக்கும் இந்நாடுகளில் வேலையில்லாது போய்விடும்.

வடகொரிய அணுவாயுத விவகாரம் தொடர்பாகச் சீனாவுக்குச் சென்றிருந்த தென்கொரியத் தூதுவர், அணுகுண்டுப் பரிசோதனையை நிறுத்துமாறு வடகொரியாவைக் கேட்கும்படி சீனர்களிடம் கோரியிருந்தார்.

இதற்கு சீன ஆட்சியாளர்கள் கொடுத்த பதில் “வடகொரிய அணுவாயுத விவகாரம் அவர்களது நாட்டின் இறைமையுடன் தொடர்புபட்ட அம்சம். வடகொரியாவின் இறைமை



கை கொடுக்கும் ஜப்பானிய- வடகொரிய தலைமைகள். உறவைப் பிரிக்க அமெரிக்கா தந்திரோபாயம்...?

யில் தலையிடும் உரிமை எமக்கு இல்லை” எனச் சீனா பகிரங்கமாகக் கூறிவிட்டது. இதில் பல விடயங்கள் குவிந்துள்ளன. சீனா, ஏனைய நாடுகளின் இறைமையில் தலையிடாத நாடு எனக் கூறிக்கொள்வதன்மூலம் அமெரிக்காவின் நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன், வடகொரியாவின் அணுவாயுதப் பரிசோதனையை மறைமுகமாக ஆதரிப்பது போன்றும் காட்டிக்கொண்டது. இது ஒருவகையில் யதார்த்தமான இராணுவ - அரசியல் என்றே கருதமுடியும். அணுவாயுதத்தினை முதலில் தயாரித்து, ஆசியா மீது பரிசோதித்துப் பார்த்த நாடே அமெரிக்காதான். அத்தகைய அமெரிக்கா, பல மில்லியன் கணக்கான செலவுகளைச் செய்து, பல ஆயிரக்கணக்கான மெற்றிக்தொன் எடையைக் கொண்ட குண்டுகளையும் பரிசோதித்து வைத்துக் கொள்வதுடன் நிலத்திற்கடியிலும், நீர்ப்பரப்புக்களிலும் தற்போதும் அத்தகைய பரிசோதனைகளை நிகழ்த்திக்கொண்டும்- வடகொரியாவையும், உலகத்தினையும் கட்டுப்படுத்த எத்தனிப்பது நியாயமற்ற நடவடிக்கையாகவே உள்ளது.

அமெரிக்காவின் எல்லைமீறும் அரசியல் நடவடிக்கைகளை கண்டிப்பதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ- சீனா, வடகொரியா, ஈராக் போன்ற அரசுகளின் வளர்ச்சியும் அவசியமானதாக உள்ளது. அவ்வாறான எச்சரிக்கை நிகழாது போகுமாயின், எதிர்காலத்தில் எந்த அரசும் எல்லைகளையோ, தன்னாதிக்கத்தையோ, சுயநிர்ணயத்தையோ தக்கவைக்க முடியாது. ஈராக்கினைத் தோற்கடிக்க விரும்பும் மேற்காசிய அரசுகள், எதிர்காலத்தில் தோற்கடிக்கப்படுவார்கள் என்ற கசப்பான உண்மையை ஏற்க மறுக்கின்றனர். அத்தகைய நிலையை முன்கூட்டியே உணர்ந்த அரசாக வடகொரியா விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. தென்கொரியர்களும், ஜப்பானியர்களும் குறுகிய அரசியல் இலாபத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்களேயன்றி, அமெரிக்கர்களினதோ அல்லது மேற்கு நாட்டவரினதோ அபாயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தவறுகின்றனர். தென்கொரியர்களும் ஜப்பானியர்களும் அச்சம் கொள்வது போல், வடகொரியர்கள் செயற்படுவார்களாயின்- இந்தியாவும், பாகிஸ்தானும் அயல்நாடுகள்போல உலக வரைபடத்தில் காண்பதும் கடினமானது. ஆனால், மேற்கு- இப்பிராந்தியத்தினைப் பதற்றமடையச் செய்வதுடன், வடகொரியாவை அப்பிராந்திய அரசுகளால் தோற்கடிக்கவைக்கவே அதிகம் விரும்புகின்றது. அதனை நடைமுறைப்படுத்தும் வேலைகளிலேயே அதிகம் ஈடுபட்டும் வருகிறது. அதற்கு, மேற்கு பயன்படுத்தும் சொற்பதமே ராஜீக முயற்சிகளுக்கூடாக வடகொரிய விவகாரம் தணிக்கப்படும் என்பதாகும்.

இரண்டாவது சம்பவம்- ஆசியாவுக்குள்ளேயே இருக்கும் இந்தியா - சீனாவுக்கிடையிலான முரண்பாட்டைக் கிளப்புவதாகும். குறிப்பாக, இந்திய லோக்சபாவின் சபாநாயகர் குழு சீனாவுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்தது. அப்போது பயங்கரவாதம் பற்றிய சீன - இந்திய கூட்டுப் பிரகடனம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதில் பாகிஸ்தானைச் சாடமுயன்ற இந்தியா , அமெரிக்காவின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தியிருந்தது மட்டுமல்லாது- அதனைச் சீனத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருந்தனர். அதாவது, பாகிஸ்தானின் தற்போதைய நிலைக்கும், வலுவுக்கும்- அமெரிக்காவின் இரட்டைவேடமே காரணமென்ற குற்றச்சாட்டு அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. அதன் மறுதினமே அமெரிக்காவின் புலனாய்வுத்துறை (CIA) பாகிஸ்தானின் அணுவாயுதப் பரிசோதனைக்கான பூர்வாங்க வேலைகளையும், தொழில நுட்ப அறிவினையும் சீனாவே வழங்கியுள்ளதாகத் தமது விசாரணை மூலமாகத் தெரியவந்துள்ளது என்றும், அவ்வாறே தற்போது நிகழ்ந்து வரும் சம்பவங்களுக்குச் சீனா காரணமாக உள்ளது என்றும் அறிக்கை விட்டிருந்தது.

இத்தகைய அறிக்கையின் முடிவு அம்பலமாகிக் கொண்டிருக்கும் போதே, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், பாகிஸ்தான் உலக வரைபடத்திலிருந்து அகற்றப்படுமென எச்சரித்திருந்தார். பதிலுக்குப் பாகிஸ்தானும் எச்சரிக்கை செய்ய ஒரு தகவற்போரே நிகழ்ந்து முடிந்தது.

அணுவாயுதப்போரை அல்லது ஒரு போரை மேற்கு நாட்டவர்கள் ஆசியாவில் ஏற்படவேண்டுமென விரும்புகின்றனர். சீனா - இந்தியாவுடனோ அல்லது இந்தியா - பாகிஸ்தானுடனோ ஒரு போரை நிகழ்த்தினால், எதிரிகளை அல்லது மேற்கு நாட்டை எதிர்க்கும் வலுவான அரசுகளைத் தமக்குள்ளேயே அழித்து விடலாம் என மேற்கு விரும்புகின்றது. அதற்கான தந்திரத்தினையே மேற்கு நாடுகள் மீண்டும் தொடங்கியுள்ளன.



ஆசியாவின் பலமிக்க வல்லரசாக சீனா தன்னைத் தக்கவைத்தே வருகின்றது.

இதில் அவர்கள் இலக்கு வைத்துள்ள முதல்நாடு சீனாவாகும். வெளிப்படையாகச் சுமுகமான உறவுகளையும், நெருக்கங்களையும் காட்டிக் கொண்டாலும்- உள்ளூர சீனாவின் பலமும், உறுதியான போக்கும் மேற்கு நாடுகளினால் ஜீரணிக்க முடியாதுள்ளது.

அதனை இலக்காகக்கொண்டே, இந்திய-பாகிஸ்தான் பகையை, இந்திய - சீனப் பகையாக மாற்றுவதற்கு அமெரிக்கா விரும்புகின்றது. ஆனால், சீன-இந்திய நெருக்கம் தகவல் தொழில் நுட்பத்தினாலும், பொருளாதாரக் காரணிகளுக்கூடாகவும் விரிவடைந்து வருகின்றது. இது நீண்ட காலத்திற்குத் தொடருமாயின் பலமான அரசுகளாக இரண்டுமே வளர்ந்துவிடும். எனவே, அத்தகைய நெருக்கத்தினையும் உறவினையும் முறியடிப்பது அமெரிக்க நலனுக்கு உடனடித் தேவையாக அமைந்துள்ளது.

இதில் பாகிஸ்தானியரைக் காட்டிலும் இந்தியர்களே பலவீனமானவர்களாக உள்ளனர். அதாவது, ஆப்கானிஸ்தான் யுத்தம் நிகழ்ந்த போது, பாகிஸ்தானியரை அமெரிக்கர்களுக்குக் காட்டிக்கொடுப்பதில் அவர்கள் குறியாக இருந்தனர்.

பாகிஸ்தானின் ஆயுதநிலைகளையும், அணுவாயுத மையங்களையும், களஞ்சியங்களையும், படைப்பிரிவின் தலைமையகங்களையும் பட்டியல் போட்டு அமெரிக்கர்களுக்குக் கொடுத்தார்கள்.

ஏனெனில், ஆஸாத் காஷ்மீரை தாம் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக. ஆனால், இறுதியில் ஜம்மு காஷ்மீரில் தேர்தலை மட்டும்தான் இந்திய அரசியல் தலைமையால் நடாத்த முடிந்தது. அதேபோன்று காட்டிக்கொடுப்பைச் செய்யும் இரண்டாவது கட்டம் தற்போது ஏற்பட்டுள்ளது. உலகம் முழுவதும் பயங்கரவாதம் பற்றி இந்திய ஆளும்வர்க்கத்தினரே அதிகம் குரல் கொடுக்கின்றனர்.

ஈராக் மீதான போரை அடிப்படையாகக்கொண்ட மாறுதல் ஒன்றை இந்தியர்கள் இப்பிராந்தியத்தில் விரும்புவதுபோன்று, அவர்களின் திட்டமிடல்கள் அமைந்து வருகின்றன. இதற்கு மாறாகப் பாகிஸ்தானியர் - அமெரிக்காவுடன் அண்மையில் ஏற்பட்ட முறுகலுக்குப் பின்பு, ரஷ்யாவுக்கு முஷாரப் விஜயம் செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளனர். இந்திய - ரஷ்யர்களின் நெருக்கத்தைவிடவா பாகிஸ்தான்-ரஷ்ய நெருக்கம் இருக்கப்போகிறது என்று கருதப்படும் நிலை காணப்படும்போது, பாகிஸ்தான் அதிபர் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யவுள்ளது, பாகிஸ்தானின் போக்கைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

**கே.ரீ.கணேசலிங்கம்**

எனவே- மேற்கு நாடுகள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டுள்ள இசைவான கொள்கைப் போக்கினால், ஆசிய நாடுகளைக் கையாள முயல்கின்றனர்.

அவர்கள் மிக ஆரம்பத்திலும் இக் கொள்கையைப் பின்பற்றினாலும், தற்போதே அத்தகைய கொள்கைப் போக்கே பொருத்தப்பாடுடையதாக அவர்களுக்குள்ளது. இதிலிருந்து தப்பிக்கொள்வதற்கு, ஆசிய நாடுகளின் தலைமைகள்- தமக்கிடையே ஒருங்கிணைப்பை உருவாக்கிக் கொள்வதுடன் அமுல்படுத்தியும் காட்ட வேண்டிய நிலையில் உள்ளதாகவே இராஜதந்திரிகள் கருதுகின்றனர். ஆனால், இது நடைமுறைச் சாத்தியமானதா என்பது வேறு விடயம்.

அத்தகைய நடவடிக்கையையே வடகொரிய விவகாரம் சுட்டிக்காட்டுகின்றது. கூட்டிணைவாகவே மேற்கு திட்டமிடல்களை மேற்கொள்ளும் போது, அதனை எவ்வாறு ஆசிய நாடுகள் எதிர்கொள்ளப் போகின்றன என்பதிலேயே, ஆசியாவின் சர்வதேச அரசியற் போக்கு எதிர்காலத்தில் அமையவிருக்கிறது.



அமெரிக்காவுக்கு எதிராக முஸ்லிம் நாடுகள் பிளவுபட்டாலும் - முஸ்லிம் மக்கள் அவ்வாறில்லை.

# மீள்குடியேற்ற அனுமதிகோரிய வலி.வடக்கு மக்கள் போராட்டத்தில் ...





தெல்லிப்பளையில் வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடாத்திவந்த, மீள்குடியமர்வுக்கான உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டோரை முதலாவது படத்திலும், வெகுஜன அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோரை இரண்டாவது படத்திலும், போராட்டம் முடிவில் வலி .வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் பிரதமருக்கான மகஜரை நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள் - கிருபாகரன், சந்திரமோகன்)

# ‘சதொச’ நவீன விற்பனைச் சந்தை திறப்புவிழாவில்...





யாழ்.நகரில் ‘சதொச’ நவீன விற்பனைச் சந்தை நேற்றைய தினம் வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

(படங்கள் - லிவிங்ஸ்டன், ராஜ்குமார)

# வட - கிழக்கு அபிவிருத்திக்கு உலகவங்கியில் தனிப்பிரிவு!

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கின் அவசர மனிதாபிமான புனர்வாழ்வு, மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக உலகவங்கி தனிப்பிரிவு ஒன்றை உருவாக்கவுள்ளது.

தற்போதுள்ள உலகவங்கியின் நிர்வாகக் கட்டமைப்பின் மூலமாகவே, இதுவரை இலங்கைக்கான உதவித் திட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் கையாளப்பட்டு வந்தன. தற்போது, இலங்கை தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு குறிப்பாக, வட-கிழக்குப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்திட்டங்கள் குறித்த அனைத்து விடயங்களையும் கையாள்வதற்காக, தனியான பிரிவொன்று உருவாக்கப்படவிருக்கின்றது.

வட-கிழக்கின் அவசர மனிதாபிமான, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான நடவடிக்கைச் செயலகத்தின் மூலமாக, எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவிருக்கும் அனைத்து செயற்திட்டங்கள் தொடர்பான விடயங்களுக்கும் புதிய பிரிவு பொறுப்பாக இருந்து செயற்படும்.

கிளிநொச்சியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் மேற்படி சிறான் அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்திட்டங்களுக்கான நிதியை விடுவித்தல் தொடர்பாகவும், செயற்திட்டங்களுக்கான துறைசார்ந்த ஆலோசனை வழங்குவது தொடர்பாகவும், மேற்படி பிரிவு தனது செயற்பாடுகளை விரிவாக மேற்கொள்ளவிருக்கிறது. (க)

## அடுத்த மூன்று மாதங்களுக்குள் அனைத்து வீடுகளுக்கும் மின்மானி

### -மின்சாரசபை நடவடிக்கை -

இதுவரை காலமும் மின்மானி பொருத்தப்படாது மின் இணைப்புக்கள் வழங்கப்பட்ட வீடுகளுக்கு, மின்மானி பொருத்தும் நடவடிக்கையில் மின்சாரசபை ஈடுபட்டுவருகின்றது.

கடந்த வருடத்தில் மட்டும் ஐம்பதாயிரம் மின்மானிகள் பொருத்தப்பட்டதாகவும், அடுத்த மூன்று மாத காலத்துக்குள், மின்மானி பொருத்தப்படாது மின் இணைப்புக்கள் வழங்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் மின்மானி பொருத்தப்பட்டுவிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மின்மானிகள் பொருத்தப்படும் போது, மின்சார வீண்விரயம் தடுக்கப்படும் என்றும் மின்சார சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

(கி,ச)

## 200 தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனம் பெறுவர்!

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் 200 தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற மாணவர்கள் அனுமதிக்கான கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் கல்வி சம்பந்தமான அபிவிருத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் மீண்டும் மழை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால், மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

உறுகாமம், உள்ளிச்சை ஆகிய குளங்கள் உடைப்பெடுக்கக்கூடிய ஆபத்து ஏற்பட்டதால், அதன் அணைக் கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, மட்டக்களப்பு ஊடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. அம்பாறை, மண்முனை ஆகிய படகுப் பாதைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் கால அட்டவணை அறிவிப்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 5 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிவரை நடைபெறும்.

6 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள், மார்ச் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதிவரையும் நடைபெறும் என நோர்வே அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை, மேலதிக சுற்றுப் பேச்சுவார்த்தை ஒன்றை ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 2 ஆம் திகதிவரை நடத்துவதென்று இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளுக்கான கூட்டத்தின் திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் ஜூன் மாதத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான திகதி தீர்மானிக்கப்படவுள்ளது.

## சமாதானப் பேச்சை எதிர்க்க எவருடனும் இணைவோம்!

### சிஹல உறுமய ஆவேசம்

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் சமாதானப் பேச்சுவார்த்தைக்ளுக்கெதிராக எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படத் தயார் என சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

இதற்காக, மக்கள் விடுதலை முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளுடன் மட்டுமன்றி கொள்கை அளவில் ஒத்துவராத தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனும் இணைந்து செயற்படத் தயார் என்று சிஹல உறுமயக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரணவக்க தெரிவித்துள்ளார்.

## இலவசப் பாடநூல்கள் யாழ்.எடுத்துவரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இலவசப்பாடநூல்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

மூன்று லொறிகளில் வந்த இந்த நூல்கள் மிக விரைவில் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக பாடசாலை ஆரம்பித்த பல நாட்களின் பின்பே கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் இப்புத்தகங்கள், இம்முறை நேர காலத்தோடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

யாழ். வர்த்தகக் கண்காட்சி 2003
வேம்படி மகளிர் கல்லூரி
காட்சியகம் இலக்கம் B2
Special offer 10%
உலகின் முதல் தர கைக்கடிகாரம்
முந்துங்கள்! இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீங்களும் ஒரு டைட்டன் கைக்கடிகாரத்தின் பெருமைமிகு உரிமையாளர் ஆகுங்கள்! கண்காட்சியின்போது வட பிரதேச விற்பனை முகவர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
Good Value Distributors (Pvt) Ltd. Ph: 074-796726, 071-296464
2 வருட சர்வதேச உத்தரவாதம் (சி/461)

# உரிமை மதிக்கப்படாமையே தமிழர் ஆயுதமேந்தக் காரணம்

## சர்வதேச நீதியரசர்கள் முன் ரணில் உரை

தமிழர்களின் அரசியல் உரிமைகள் சரியான முறையில் மதிக்கப்படாமையினாலேயே தனிநாடு கோரி தமிழ் இளைஞர்கள் போராட வேண்டியநிலை ஏற்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நீதிமுறைமையை பலப்படுத்தும் நீதித்துறை அமைப்பின் மூன்றாவது மாநாடு நேற்று கொழும்பு ஒபரோய் ஹோட்டேலில் ஆரம்பமானது.

இந்த ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஐம்பது வருடங்களுக்கு முன்னர் சகல இன மக்களும் இந்நாட்டில் புரிந்துணர்வுடன் வாழ்ந்தார்கள். ஆனால், பிற்பட்ட காலங்களில் சமூக சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டது. பெரும்பான்மை என்ற உணர்வினால் தமிழர்களின் அபிலாசைகள் மழுங்கடிக்கப்பட்டன. இதன் நிமித்தமே ஆயதப்போராட்டம் ஆரம்பமாகியது என்றும் கூறினார்.

கடந்த 20 ஆண்டு காலயுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது என்று கூறிய அவர், நீதித்துறை, ஊடகத்துறை சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்றது என்றும் தெரிவித்தார்.

இந்த மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும். இதில்- அவுஸ்திரேலியா, நைஜீரியா உட்பட 10 நாடுகளின் பிரதம நீதியரசர்கள் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஸ்தாபனத்தின் பணிப்பாளரும் மற்றும் இலங்கையின் உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்களும் இதில் கலந்து கொண்டனர். (200)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் உடன் நீக்கப்பட மாட்டாது

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான தருணம் இதுவல்ல. பொருத்தமான காலகட்டம் வரும்போது அந்த சட்டம் நீக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோரி கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி சபையில் சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதம் நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

அந்த விவாதத்தை முடித்து வைத்துப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும தெரிவிக்கையில, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என பல தரப்பட்ட கோரிக்கைகள் எமக்கு கிடைத்துள்ளன. அந்தச் சட்டத்தை நீக்க வேண்டிய காலகட்டம் வரும்போது அது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கும் என்றார்.

அமைச்சரை பதிலளிக்கவிடாது பொ.ஐ.மு மற்றும் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர். பயங்கரவாதத்தை அடக்குவதற்குப் பயன்படும் அந்த சட்டமூலம் பற்றிப் பேச நீண்ட நேரத்தை ஒதுக்கித்தருமாறு தினேஷ் குணவர்த்தன எம்.பி சபாநாயகரிடம் கோரினார்.

ஆனால், சபாநாயகர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார். இதனால் சர்ச்சை எழுந்தது. பத்து நிமிடங்களிற்கும் மேலாக சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய விநாயகமூர்த்தி தெரிவிக்கையில், பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் மக்களை பலவழிகளாலும் துன்புறுத்தியுள்ளது. கைது செய்தல், காணாமல் போதல்,பாலியல் வல்லுறவுகள், கொலைகள் எனத் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் சித்திரவதைக்குள்ளாகி இருக்கின்றனர் என்று கூறிய விநாயகமூர்த்தி, சமாதானச் சூழ்நிலை நிலவுவதால் பயங்கரவாதத் தடைச்சட்டம் இனிமேல் தேவையில்லை என்றும் அதனை நீக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்து உரையாற்றிய இரா. சம்பந்தன் எம்.பி தெரிவிக்கையில், தமிழ் ராணுவம் ஒன்று உருவாவதற்கு இந்தச் சட்டமே துணை புரிந்தது என்றார்.

1979 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் அமுலானதிலிருந்து யுத்தநிறுத்தம் ஏற்படும்வரை கொலை செய்யப்பட்ட, கைது செய்யப்பட்ட இளைஞர்களின் விபரங்களைப் பட்டியலிட்டுக் காண்பித்தார். (200)

### 1000 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட தினத்தையொட்டி சிறைக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் நிலவிவந்த இழுபறி தீர்ந்து இணக்கம் உருவாகியுள்ளது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களையடுத்து, ஆயிரம் சிறைக்கைதிகளை விடுவிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். (01)

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை 29 ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

1974ம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட 11 பேரின் நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த 29 வது நினைவுதினம் நேற்றுமாலை 5 மணியளவில் வீரசிங்கம் கட்டடத்தின் முன்பாக உள்ள நினைவுத் தூபியின் முன்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் அருட்தந்தை ஜெயக்குமார், கலாநிதி குணராசா, யாழ்.மாநகர சபை உறுப்பினர் இருதயராஜன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் இறந்தவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு முதல் மலர் மாலையை அருட்தந்தை ஜெயக்குமார் அணிவித்தார். (ரா)

## பொங்கல் - 2003

# வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியின் முன்னணி வர்த்தக நிலையங்கள் இணைந்து யாழ்.வணிகர் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் பொங்கல் - 2003 வர்த்தகக் கண்காட்சி நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

நேற்று, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமான கண்காட்சியில், பிரதம விருந்தினர்களாக இலங்கை வங்கியின் மேற்தரக் கிளை முகாமையாளர் விக்னராஜா மற்றும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு கொழும்பு வர்த்தகர்களும், யாழ். வர்த்தகர் சங்கத்தினரும் பிரதம விருந்தினர்களை மங்கள இசையுடன் பவனியாக விழா நடைபெறும் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

வர்த்தகக் கண்காட்சி திறப்பு விழா யாழ்.வர்த்தகர் சங்கத்தின் துணைத்தலைவர் சற்குணம் தலைமையில் நடைபெற்றது.

பொங்கல் - 2003 வர்த்தகக் கணகாட்சியை இலங்கை வங்கியின் மேற்தரக்கிளை முகாமையாளர் விக்னராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (லி,கி)

# யாழ்.புனர்வாழ்வு நடவடிக்கை நேரில் ஆராய செல்வின் வருகை

(யாழ்ப்பாணம்

வட- கிழக்குக்கான அவசர மனிதாபிமான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான நடவடிக்கைச் செயலகப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் மிகவிரைவில் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவசரமாக மேற்கொள்ளப்பட இருக்கும் புனர்வாழ்வுப் பணிகள் குறித்து நேரடியாக அவதானிப்பதற்காகவே அவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

மேலும், 'சிறான்' செயலகத்துக்கான நிர்வாகக் கட்டமைப்பை வலுவாக்குவதற்கும் மாவட்டத்தில் இச்செயலகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (க)

### விடுதலை..

மட்டுமல்ல, தமிழர்கள் புலம்பெயர்ந்து வசிக்கும் பல ஐரோப்பிய நாடுகளிலும் மேடையேற்றப்பட்டுள்ளது. இதன்போது பெருந்தொகையான தமிழ் ரசிகர்கள் அலையலையாகத் திரண்டு வந்திருந்தனர்.

அம்மக்கள் மத்தியில் உறங்கிக் கிடந்த விடுதலை உணர்வுகளுக்கு உரம் ஊட்டுவதாக எனது பாடல்கள் அமைந்தன என அவர் மேலும் தெரிவித்தார்.

கிராமியக் காற்று இசை நிகழ்ச்சி யாழ். இந்துக் கல்லூரியில் முன்னிரவு 7.45 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன மற்றும் யாழ். மேலதிக அரசாங்க அதிபர்து. வைத்திலிங்கம் உட்படப் பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற இக்கிராமியக்காற்று இசை நிகழ்ச்சியைக் காண பெருந்தொகையான பொதுமக்களும் வந்திருந்தனர். (லி)

### ஆயுதங்களை...

பாதுகாப்புப்படையினர் விமானம் மூலம் யாழ். செல்ல, பலாலி விமானத்தளமும், கடல் மார்க்கமாகச் செல்ல காங்கேசன் துறைத் துறைமுகமும் மாத்திரமே உள்ளன.

அவை இரண்டையும் பாதுகாக்கவே அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை புலிகள் வசம் இரண்டு கனரக ஆயுதங்கள் உள்ளன. அவை இரண்டும் 22 கிலோமீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கக்கூடியவை.

யாழ். நகரை புலிகள் இயக்கம் தாக்கியபொழுது, இவை இரண்டையும் முகமாலைவரை முன்நகர்த்தினார்கள். அதனைத் தவிர வேறு கனரக ஆயுதங்களையும் புலிகள் இயக்கம் கொள்வனவு செய்திருக்கின்றது. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டுமாயின், புலிகள் வசமுள்ள இக் கனரக ஆயுதங்களும் கீழே வைக்கப்பட வேண்டும் என்றார் கலாநிதி சரத் அமுனுகம. (200)

# அமெரிக்காவில் விசேட பயிற்சி ராணுவக்குழு செல்கின்றது

## தெரிவில் முறைகேடு எனவும் புகார்

(கொழும்பு)

விசேட பயிற்சிக்காக இராணுவ படைப் பிரிவொன்று அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளது.

எதிர்வரும் பதினெட்டாம் திகதி இப்படைப்பிரிவு கொழும்பிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லவிருக்கிறது.

அதேவேளை- மேற்படி விசேட பயிற்சிக்குப் படை அதிகாரிகளைத் தெரிவுசெய்ததில் முறைகேடு நிகழ்ந்ததாக பிரிகேடியர் மதுர விஜயவிக்கிரம என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தன்னை விட சேவை மூப்புக் குறைவான பிரிகேடியர் ரி. ஆர். சில்வா இப்பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டமை முறைகேடானது என்று அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- "கடுமையான செயல்களின்போது முகாமைத்துவம்' என்ற தொனிப்பொருளுடனான விசேட பயிற்சிக்காக பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்றும் நேற்று அமெரிக்காவுக்குச் சென்றுள்ளது.

இக்குழுவில்- பல்வேறு தரத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் இருபத்திமூன்று பேர் உள்ளனர். அமெரிக்காவின் லூசியானா பிராந்தியத்தில் உள்ள பொலிஸ் அக்கடமியில் மேற்படி விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (01)

### வலிகாமம்...

கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச்சந்தித்து நேரில் பேசவுள்ளதாகவும், அப்போது நேரடியாகவே தான் மகஜரைக் கையளிப்பதாகவும் உறுதியளித்தார்.

தமது போராட்டத்திற்கு சாதகமான பதில் கிடைக்காதுவிட்டால், தமது போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று ஒன்றிய உறுப்பினர்கள் தெரிவித்தனர். (கி,ச)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.70 | 155.91 |
| 1 யூரோ | 100.82 | 101.96 |
| 1 சுவிஸ் பிராங் | 68.91 | 69.96 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 55.22 | 56.19 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.